www.eelamview.com

# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு | குரல் 5 | டிசெம்பர் 84 | ரூ 2

# விடுதலைப்போர் தீவிரமாகிறது

**யாழ்ப்பாணத்திலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள தெல்லிப்பழையில் விடுதலைப் புலிகள் நடத்திய கெரில்லாத் தாக்குதலில் சிங்கள ஸ்ரீலங்கா இராணுவத்தின் வடபிராந்தியக் கமாண்டர் பிரிகேடியர் ஏ. ஆரியப்பெருமவும் மற்றும் எட்டு ஸ்ரீலங்கா இராணுவப் படையினரும் கொல்லப்பட்டனர்.**

நவம்பர் 19-ம் திகதி வறுத்தலைவிளானில் கட்டுவன் - தெல்லிப்பழை வீதியில் நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்துக் கொண்டு எமது கெரில்லா வீரர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கெதிரான திடீர்த்தாக்குதலுக்குத் தயாராய் நின்று கொண்டிருந்தனர். இரண்டு கவசவண்டிகள் சகிதம் பிரிகேடியர் ஆரியப்பெரும ஜீப்பில் வந்து கொண்டிருந்த போது நிலக்கண்ணிகளை வெடிக்கச் செய்து விடுதலைப் புலிகள் கெரில்லாத் தாக்குதலை மேற்கொண்டனர். நிலக்கண்ணி வெடித்ததில் பிரிகேடியர் ஆரியப்பெரும சென்று கொண்டிருந்த ஜீப் வாகனம் தூளாகச் சிதறியது. இந்தத் தாக்குதலில ஆரியப்பெருமவும் மற்றும் எட்டு இராணுவக் கமாண்டோக்களும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

வடக்கில் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் இனவெறியன் ஆரியப்பெரும எமது கெரில்லாத் தாக்குதலில் கொல்லப்பட்டமை சிங்கள இனவாத அரசுக்கு அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழீழத்தில் நரவேட்டையாடித் திரியும் சிங்கள ஆயுதப் படைகளின் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கர்னல் பதவி வகித்து வந்த ஆரியப்பெரும வடக்கில் இராணுவ அடக்கு முறையைத் தீவிரப்படுத்தி சிங்கள இனவாத அரசுக்குச் செய்த விசுவாசமான சேவையைப் பாராட்டி அவனது மரணத்திற்குப் பிறகு பிரிகேடியர் பதவி வழங்க ஜே. ஆர். ஜயவர்த்தனா இவருக்கு கௌரவம் வழங்கியிருக்கிறார்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் திகதி யாழ் ஆஸ்பத்திரி வீதியில் கஜபா ரெஜிமண்ட் சிங்கள இராணுவப் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலே பெய்ருட் பாணியில மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல் என்று ஆரியப்பெரும் குறிப்பிட்டிருப்பது பற்றி விடுதலைப் புலிகள் (மே, 1984) இதழில் ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம்.

## இராணுவக் கவச வண்டி நாசம்

நவம்பர் முதலாம் திகதியன்று யாழ்ப்பாணத்திலிருந்து பத்து மைல் தொலைவில் அச்சுவேலி-வசாவிளான் வீதியில் நிலக்கண்ணி வெடிகள் சகிதம் எமது கெரில்லா வீரர்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இராணுவக் கவசவண்டி பூரணமாக நாசமாக்கப்பட்டதுடன் ஒன்பது இராணுவ வீரர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் மூன்று சிங்கள இராணுவ வீரர்கள் இத்தாக்குதலில் படுகாயத்திற்குள்ளாகினர்.

## ஆறு இராணுவப் படையினர் பலி

நவம்பர் இரண்டாம் திகதியன்று தொண்டமனாறு - பலாலி வீதியில் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா இராணுவக் கவசவண்டியை நாசஞ் செய்தனர். இத்தாக்குதல் நிகழ்ச்சியில் ஆறு சிங்கள இராணுவப் படையினர் கொல்லப்பட்டனர்.

## கமாண்டோக்கள் கொல்லப் பட்டனர்

வடமாகாணத்தில் சிங்கள இராணுவப் படையினர் செய்துவரும் அட்டூழியங்களுக்குப் பதிலடி கொடுக்குமுகமாக எமது கெரில்லா வீரர்கள் செப்டம்பர் முதலாம் திகதியன்று பருத்தித்துறையிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள திக்கம் என்ற இடத்தில் சிங்கள இராணுவப் படைகளுக்கு எதிரான அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டனர். திக்கத்தில் ரோந்து வந்துகொண்டிருந்த இராணுவ வாகனங்களை நிலக்கண்ணி வெடிகளால் நாசஞ் செய்தனர் எமது விடுதலை வீரர்கள். இந்தத் தாக்குதலில் இருபது பொலிஸ் கமாண்டோக்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமுற்றனர்.

எமது கெரில்லா வீரர்களில் முக்கியமான கெப்டன் ரஞ்சனின் மரணத்திற்கு இந்த வெறிபிடித்த சிங்கள பொலிஸ் கமாண்டோ பிரிவே பொறுப்பு வகித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



சிதைக்கப்பட்ட சிறிலங்கா இராணுவ வாகனம்.

## முல்லைத்தீவில் தாக்குதல்

முல்லைத் தீவு இராணுவ முகாமைச் சேர்ந்த சிங்களப் படையினர் அப்பாவித் தமிழருக்கு எதிராக அட்டூழியங்கள் இழைப்பதில் பேர் போன இளமெதியர்களாவர். முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களை இவர்கள் தொடர்ச்சியாக இம்சித்து வந்ததுடன் இப்பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஊக்குவிப்பதிலும் இவர்கள் பெருமளவில் துணை புரிந்து வந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை, கொக்கிளாய், மாத்தளான் போன்ற சிறிய மீன்பிடி கிராமமையங்களில் சிங்கள மீனவர்கள் இந்த இராணுவத்தின் துணையுடன் நிரந்தர வாடி அமைத்து மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் மீனவர்களின் வாடிகளையும் குடில்களையும் படகுகளையும் வலைகளையும் சிங்கள அரசு படையினர் எரித்து நாசம் செய்துள்ளனர். செம்மலை, கொக்கிளாய் போன்ற இடங்களில் சிங்களவர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து தமிழ் மீனவர்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி உறவினர்களிடம் சென்று தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு தமிழருக்கு எதிரான அட்டூழியங்கள் இழைப்பதில் முன்னின்ற முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சேர்ந்த அரச படையினர் மீதுதான் எமது கெரில்லா வீரர்கள் தாக்குதல் நடத்தினர்.

செப்டம்பர் 10-ம் திகதி முல்லைத்தீவிலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ள செம்மலை என்ற கிராமத்தில் எமது வீரர்கள் அரச படைக்கு எதிரான தாக்குதலுக்குத் தயாராக நின்றனர். செம்மலைக் கூடாகச் செல்லும் முல்லைத்தீவு-கொக்கிளாய் வீதியில் நிலக்கண்ணி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. காலை 10-15 மணியளவில் ஒரு இராணுவ ட்ரக், இரண்டு இராணுவ ஜீப்கள் சகிதம் முல்லைத்தீவு முகாமைச் சேர்ந்த இராணுவப் படையினர் குறிக்கப்பட்ட இடத்திற்கு ரோந்து வந்து கொண்டிருந்தனர். ஸ்தலத்தை அடைந்ததும் நிலக்கண்ணிகள் வெடித்தன. ஒரு ஜீப் சின்னாபின்னமாகியது. முன்னால் சென்று கொண்டிருந்த ஜீப் பீதியில் விரைந்து ஓடித் தப்பிச் சென்றுவிட்டது. சடுதியாக நிறுத்தப்பட்ட இராணுவ ட்ரக் வண்டியிலிருந்து இராணுவப் படையினர் ஒருவர்பின் ஒருவராகக் குதித்து இறங்க ஆரம்பித்த போது எமது கெரில்லா வீரர்கள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். நான்கு இராணுவப் படையினர் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். சிதையுண்ட ஜீப்பில் கொல்லப்பட்ட இராணுவப் படையினரையும் சேர்த்து மொத்தமாக பதினேந்து இராணுவத்தினர் இத்தாக்குதலில் பலியானார்கள்.

முல்லைத் தீவு மாவட்டத்தின் கரையோரச் சிங்கள மீனவர்கள் மத்தியில் இந்த வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதல் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியது. "புலிகள் வந்துவிட்டார்கள்" என்று கதை காட்டுத் தீயாகப் பரவியது. இராணுவ ஒத்தாசையுடன் அடாததாக அங்கு தங்கி நின்ற நூற்றுக்கணக்கான சிங்கள மீனவர்கள் சிங்கள இராணுவத்தின் உறுதி மொழிகளையும் மீறி தமது வாடிகளை விட்டு வெளியேறிவிட்டனர்.

## களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதல்

செப்டம்பர் 22-ம் திகதி மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். விசேஷப் பயிற்சி பெற்ற ஐம்பதுக்கும் அதிகமான பொலிஸ் கமாண்டோக்களால் எப்போதும் இந்த பொலிஸ் நிலையம் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. இந்த பொலிஸ் நிலையத்தின் மீது திடீர்த் தாக்குதல் மேற்கொள்ள எமது கெரில்லா வீரர்கள் திட்டம் தீட்டிச் செயற்படுத்தினர்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்புப் பிரதேசத் தாக்குதற் பிரிவுத் தலைவன் லெப்டினண்ட் இரா. பரமதேவா தலைமையில் எமது கெரில்லா வீரர்கள் அதிரடித் தாக்குதலில் இறங்கினர். கடத்தப்பட்ட வாகனங்களில் எமது வீரர்கள் பொலிஸ் நிலையத்தின் முன்னால் இறங்கினர். தங்களது பொலிஸ் நிலையம் தாக்கப்படக்கூடும் என்பதை எப்படியோ முன்கூட்டியே ஊகித்துக்கொண்டுவிட்ட பொலிஸ் நிலையம் தயார் நிலையில் நின்று கொண்டிருந்திருக்கிறது. எமது கெரில்லா வீரர்கள் வாகனத்திலிருந்து இறங்க ஆரம்பித்ததுமே பொலிஸ் கமாண்டோக்கள் எமது வீரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். பொலிஸ் கமாண்டோக்களுக்கும் எமது கெரில்லா வீரர்களுக்குமிடையில் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. பாதுகாப்பான இடங்களில் தங்களை முன்னதாகவே நிலைப்படுத்திக் கொண்டு விட்டதால் பொலிஸ் கமாண்டோக்களுக்குச் சாதகமாகவே சூழ்நிலை அமைந்துவிட்டது. எனினும் எமது வீரர்கள் உறுதியோடு போராடினார்கள். விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியில் முன் நின்று அச்சமின்றிப் போராடிய லெப்டினன்ட் இரா. பரமதேவா களத்திலேயே வீரமரணம் அடைந்தார். பரமதேவாவுடன் ரவி எனப்படும் தம்பிப்பிள்ளை வாமதேவன் என்ற இளம் கெரில்லாப் போராளியும் இத் தாக்குதலின்போது வீரமரணம் அடைந்தார். நிலைமை தங்களுக்குப் பாதகமாக இருப்பதை உணர்ந்துகொண்ட எமது போராளிகள் தந்திரோபாய ரீதியில் தாக்குதலை நிறுத்திக் கொண்டு விட்டனர். பிற போராளிகள் ஆபத்து எதுவுமின்றித் தமது தளங்களுக்கு மீண்டனர்.

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com

www.eelamview.com



# புலிகளின் குரல்

## ராகுல தேரோவுக்கு ஒரு கடிதம்

தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு நீங்கள் ஒரு அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். சிங்கள - பௌத்தத்தின் பிரதிநிதியாக, சிறி-லங்கா அரசின் ஆதுவராக எம்மை சமாதானப் பேச்சுக்கு அழைத்திருக்கிறீர்கள். இந்த அழைப்பில் ஒரு முன் நிபந்தனையாக ''வன்முறைச் செயல்களை நிறுத்தி, சட்டமீறல் நடவடிக்கைகளைக் கைவிட்டு, சமரசம் பேசவேவசம் வாருங்கள்'' என்று கேட்டிருக்கிறீர்கள். உங்களது இந்த அழைப்பு ஒருபுறம் எமக்கு வேடிக்கையாக இருப்பதுடன் மறுபுறம் வேதனையையும் கொடுக்கிறது.

தமிழ் இளைஞர்கள் வன்முறையாளர்கள், சட்டத்தை மீறுபவர்கள், சமாதானத்தின் விரோதிகள் என்ற ரீதியில் உங்களது சமாதானக் கோரிக்கையிலேயே எம்மீது குற்றத்தை சுமத்திவிடுகிறீர்கள். ஈழத் தமிழர் தேசிய பிரச்னையின் சிக்கலான பரிமாணங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்காது அதனை தமிழ் இளைஞரின் 'பயங்கரவாதம்' என்ற முறையில் உங்களது அரசு உருவகப்படுத்த முனையும் அபாண்டமான பிரசாரத்தையே நீங்களும் முன்னெடுப்பதாகத் தெரிகிறது.

உண்மையில் வன்முறையாளர்கள் யார்? சட்டத்தை மீறுபவர்கள் யார்? சமாதானத்தின் விரோதிகள் யார்? உங்களுக்கு உண்மை தெரியாததல்ல. உண்மை தெரிந்தும் உங்கள் அரசின் இரத்தக் கறையை மூடி மறைப்பதற்கு நீங்கள் பொய்மைக்குள் ஒளித்துக்கொள்கிறீர்கள். ஆனால் முழு உலகமுமே உண்மையை அறிந்து வைத்திருக்கிறது. உலக மனச்சாட்சி எனும் நீதிமன்றத்தில் உங்கள் அரசு குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இனக்கொலை எனும் மனுக்குலத்திற்கு எதிரான மாபெரும் குற்றப்பழி உங்கள் ஆட்சியாளர் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. உங்களது அரசும் அதன் அடக்குமுறை அமைப்பான ஆயுதப் படைகளுமே உண்மையான வன்முறையாளர்கள்; சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுபவர்கள்; சமாதானப் பாதையை விரும்பாது பலாத்காரம் புரிபவர்கள்.

நாம் வன்முறையாளர்கள் அல்லர். அராஜகவாதிகளும் அல்லர். நாம் அடிமைகளாக வாழ விரும்பவில்லை. அடிமைகளாக அழிந்து போவதையும் விரும்பவில்லை. நாம் சுதந்திரமாக, நிம்மதியாக, சமாதானமாக, வாழ விரும்புகிறோம். எம்மீது திணிக்கப்பட்டிருக்கும் ஆயுத பலாத்கார அடக்குமுறையிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ளவே நாம் ஆயுதம் தரித்திருக்கிறோம். நாம் தர்மத்திற்காகப் போராடுகிறோம்.

தர்மம்பற்றி நாம் உங்களுக்கு போதிக்கத் தேவையில்லை. புலமைபெற்ற பிக்கு என்ற வகையில் உங்களுக்கு பௌத்த தர்மம் என்பது புரியாததல்ல. பிரபஞ்ச ஒழுங்கமைதிக்கும் மனித உறவுகளின் ஒத்திசைவுக்கும் மூலமானது தர்மம் என்று நீங்கள் வழிபடும் அந்த மெய்ஞானி கூறவில்லையா? தர்மம் என்பது மனிதம் அல்லவா? தார்மீக வாழ்வின் சாரம் அல்லவா? மொட்டை அடித்து, காவி தரித்து, புத்தரின் போதனைகளை விழுங்கிக்கொண்ட உங்களுக்கு தர்மத்திற்கும் அதர்மத்திற்குமுள்ள வேறுபாடு தெரியாததல்ல. தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்படும் தர்மம், தார்மீகம், காருண்யம் எத்தன்மைவாய்ந்தது என்பது உங்களுக்குப் புரியும். பௌத்த தர்மத்திற்கே அவமானச் சின்னமாக விளங்கும் ஒரு அதர்ம அரசின் பிரதிநிதியாக நீங்கள் எம்மோடு சமரசம் பேச விரும்புகிறீர்கள்.

உங்களுக்கு நாம் தெட்டத் தெளிவாக சொல்ல விரும்புவது இதைத்தான். பௌத்தத்தின் சார்பில், தர்மத்தின் சார்பில் சமாதானத்தை நீங்கள் விரும்புவதாயின் வன்முறைவாதிகளான உங்களது ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தையை நடத்துங்கள். தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களை நிறுத்தி, சட்டமீறல் நடவடிக்கைகளைக் கைவிடுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுங்கள். தமிழ் மக்களை இனவாரியாக ஒழித்துக்கட்டும் இனக்கொலைத் திட்டத்தைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுங்கள். அப்பாவி மக்களை கொன்று குவித்து, ஏதுமறியாத எமது இளைஞர்களை நரவேட்டையாடிவரும் ஆயுதப் படைகளை தமிழ் மண்ணிலிருந்து வெளியேற்றுமாறு உங்களது அரசைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

அதர்மமான அடக்குமுறை நீங்கி, எமது மக்கள் சுதந்திரமான வாழ்வைத் தழுவிக்கொள்ளும்வரை நாம் ஆயுதங்களை கைவிடப்போவதில்லை. அடிமைத் தளைகள் அகன்ற சுதந்திரமான, சமாதானமான, நிம்மதியான வாழ்வை இலட்சியமாகக் கொண்டே நாம் ஆயுதப் போரை வரித்துக்கொண்டோம். நாம் சமாதானத்தையே விரும்புகிறோம். சமாதானத்தை உங்களிடம் இரந்துகேட்டு ஏமாந்து போவதைவிட போராடிப் பெறுவதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம்.

# பரமதேவா

1983 செப்டம்பர் 23ம் திகதி.

மட்டக்களப்புச் சிறைச் சாலையை உடைத்துக்கொண்டு வெளியேறுகிறான் பரமதேவா.

1984 செப்டம்பர் 22ம் திகதி.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தாக்குதலின்போது நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் வீரமரணம் அடைகிறான் பரமதேவா.

மட்டக்களப்புச் சிறை உடைப்புச் சம்பவத்தைப் புதியதோர் திருப்பம் என்றும் ஓராண்டு நிறைவு என்றும் சிலர் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த போது— சரியாக அதற்கு முதல் நாள் ஒரு பொலிஸ் நிலையத்தின் மீது ஆயுதசன்னதமாய் கெரில்லாத் தாக்குதலை முன்னின்று நடத்துகிறான் இந்த வீரமகன்.

ஒரு விடுதலை வீரனின் வாழ்க்கை இப்படித்தான் அமைய முடியும்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்புப் பிரிவுத் தாக்குதற் படைத்தளபதியான லெப்டினன்ட் இரா. பரமதேவா சிங்கள பொலிஸ் கமாண்டோக்கள் நிறைந்த களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதலுக்குத் தலைமை தாங்குகிறான். அஞ்சா நெஞ்சினனாக முன்னணியில் நின்று போரிட்ட பரமதேவா களத்திலேயே வீர மரணமடைந்தான்.

பரமதேவா மட்டக்களப்பு மண் ஈந்த வீரமகன். இருபத்தெட்டு வயதான பரமதேவா நன்கு பயிற்றப்பட்ட கெரில்லாப் போராளியாவார். பத்தொன்பது வயது மாணவனாக மட்டக்களப்பு அரசினர் கல்லூரியின் உயர் வகுப்பு மாணவனாக இருந்த காலத்திலிருந்தே சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் பரமதேவா துடிப்போடு பங்கு கொண்டிருக்கிறான்.

1975 மே மாதம் 22ம் திகதி ஸ்ரீலங்கா அரசின் குடியரசு தினத்தைப் பகிஷ்கரித்து மாணவர்களை அணிதிரட்டிப் போராடியமைக்காகப் பாடசாலையிலிருந்தே பரமதேவா நீக்கப்பட்டிருக்கிறான்.

1977ம் ஆண்டில் மட்டு நகரில் நடைபெற்ற ஒரு குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஸ்ரீலங்கா பொலிஸாரால் தேடப்பட்ட பரமதேவா அந்த இளம் வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டான்,



1978ல் இயக்கத் தேவைகளுக்காக செங்கலடி மக்கள் வங்கிப் பணத்தைப் பறித்தெடுப்பதில் ஈடுபட்ட பரமதேவா பொலிஸாருடன் நடத்திய சண்டையில், கையின் மேற்பாகத்தில் குண்டு பாய்ந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டான்.

1981ல் ஸ்ரீலங்கா அரசு விடுதலை வீரன் பரமதேவாவிற்கு எட்டு வருடக் கடுங்காவல் தண்டனையை வழங்கியது. நீதிமன்றத்தில் கூடியிருந்தோர் இத்தண்டனையைக் கேட்டுக் குமுறி அழுத போதும், பரமதேவா எப்போதும் போலச் சிரித்த முகத்தோடு அந்தத் தண்டனையை ஏற்றுக் கொண்டான்.

தமிழீழ விடுதலைப் போராளிகளில் நீண்டகாலச் சிறைவாசம் அநுபவித்தவன் பரமதேவா. போகம்பர, வெலிக்கடை, நீர்கொழும்பு, மகசீன், மகர ஆகிய சிறைச்சாலையில் எல்லாம் சிறைவாசம் அநுபவித்த பரமதேவா சிங்களக் கைதிகளின் மத்தியிலும் மரியாதைக்குரியவனாக இருந்திருக்கிறான்.

1971ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியில் ஈடுபட்ட சிங்கள அரசியற் கைதிகளுடன் சிறைச்சாலையில் பயன்மிகுந்த சர்ச்சைகளை பரமதேவா நடத்தியிருக்கிறான்.

1983 ஜூலை மாதம் வெலிக்கடையில் தமிழ் அரசியற் கைதிகள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டதையடுத்து மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் பரமதேவாவும் ஒருவனாக இருந்தான்.

1983 செப்டம்பர் 23ம் திகதி மட்டக்களப்புச் சிறைசாலையை உடைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் போராளிகள் வெளியேறிய வெற்றிகரமான நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகித்தவன் பரமதேவா.

சிறையிலிருந்து தப்பியதும் அவன் ஓய்ந்து போய் நின்றுவிடவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டப் பாதையின்மூலமே தமிழீழ இலட்சியத்தை அடைய முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட பரமதேவா விரைவிலேயே தமிழீழ மண்ணில் தனது கெரில்லாப் போராட்ட வாழ்க்கையைத் தொடங்கினான்.

விடுதலைப் புலிகள் ஒட்டி சுட்டான் போலீஸ் நிலையத்தின்மீது நடத்திய வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதலில் பரமதேவா முன்னணி வீரனாக நின்று செயற்பட்டான். கொக்கிளாயில் சிங்கள இராணுவத்தின்மீதான கெரில்லாத் தாக்குதலிலும் பரமதேவா முன்னின்றான்.

என்றும் சிரித்த முகத்தோடு காட்சிதரும் பரமதேவாவின் கூர்மையான அறிவையும், விடுதலைப் போராட்டத்தையும், போர்க்குணத்தையும் மாறுபட்ட விடுதலை இயக்கங்கள் கூட அங்கீகரிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் பரமதேவாவின் பெயரைத் தெரியாதவர்கள் யாருமே இல்லை.

பரமதேவாவுடன் சேர்ந்து களுவாஞ்சிகுடி போலீஸ் நிலையத் தாக்குதலில் முன்னின்று போராடிய மகிழடித் தீவைச் சேர்ந்த ரவி எனப்படும் தம்பிப்பிள்ளை வாமதேவன் என்ற இளம் கெரில்லாப் போராளியும் களத்திலேயே வீர மரணமடைந்தான்.

தமிழீழ இலட்சியத்துக்காகப் போராடி வீர மரணமடைந்த லெப்டினன்ட் இராமலிங்கம் பரமதேவாவுக்கும், தம்பிப்பிள்ளை வாமதேவனுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் வீர வணக்கத்தைச் செலுத்துகிறார்கள்.

# இந்திராவின் மறைவுக்கு புலிகளின் அஞ்சலி

மாண்புமிகு
ராஜீவ் காந்தி அவர்களுக்கு,
இல: 1, சப்தர்ஜங் ரோடு,
புதுடில்லி.

அன்புடையீர்,

அன்னை இந்திரா காந்தி கொடிய கொலைஞர்களால் அகால மரணமடைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயரமும் பேரதிர்ச்சியுமுற்றோம். மனித சமூகத்திற்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமான இக்கொலைபாதகச் செயலை நாம் வன்மையாகக் கண்டனம் செய்கிறோம்.

ஒடுக்கப்பட்ட மனுக்குலத்தின் ஒளி விளக்காகவும், பாரத தேசத்தின் உன்னத ஆத்மாவாகவும் திகழ்ந்த ஒரு ஒப்பற்ற பெரும் தலைவரை நாம் இழந்து நிற்கிறோம். தங்கள் குடும்பமும் இந்திய மக்களும் உலகமும் இந்த ஈடுசெய்யமுடியாத பேரிழப்பால் அடைந்திருக்கும் ஆழ்ந்த துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

திருமதி இந்திரா காந்தி உலக சமாதானத்திற்காகவும் மனித சுதந்திரத்திற்காகவும் அயராது போராடிய வீராங்கனையாவார். ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் ஏகோபித்த குரலாகத் திகழ்ந்தார். தீர்க்கதரிசனத்தோடும் பூரண அர்ப்பணிப்போடும் பாரத தேசத்தை சோசலிசப் பாதையில் நிர்மாணம் செய்ய அயராதுழைத்தார். நவபாரதத்தின் சிற்பியாகத் திகழ்ந்தார். இந்திய துணைக் கண்டத்தில் ஏகாதிபத்தியத்தையும் அதன் போாதிக்க சதிவலைப் பின்னலையும் அவர் முழுமூச்சாக எதிர்த்து வந்தார். தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உலகமெங்கும் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களை அவர் முன்நின்று ஆதரித்து வந்தார்.

அநாதரவான நிலையில் துயருறும் தமிழீழ மக்களின் பால் அன்னை இந்திரா காந்தி எப்போதுமே அனுதாபமும் அக்கறையும் காட்டிவந்திருக்கிறார். ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து வருவதனை அவர் எப்போதுமே கண்டித்தார். தமிழ் மக்களின் மீதான இனப் படுகொலையை நிறுத்தியாக வேண்டும் என்று அரசியல் ராஜதந்திர வழிகளில் அவர் ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்தித்தார். இந்தியாவின் நல்லெண்ண அனுசரணையின் கீழ் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு தனிப்பட்ட முறையில் பெரும் அக்கறை செலுத்தினார். தமிழ் மக்களின் பெருங்காவலராகத் திகழ்ந்த அன்னை இந்திராவின் தனிப்பட்ட அக்கறை மட்டும் இல்லாது போயிருந்தால் எமது தேசமே அழிந்து போயிருக்கும். தமிழ் விடுதலை இயக்கத்தின் ஆத்மீகவலிமையின் கோபுரமாக அவர் திகழ்ந்தார்.

தமிழ் மக்கள் இந்திராவை என்றும் அன்புடனும், நன்றியுடனும் பெருமதிப்புடனும் நினைவுகூர்வார்கள். தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள நீங்கள், எந்த உன்னத இலட்சியங்களுக்காக அன்னை இந்திரா காந்தி வாழ்ந்து, போராடி இறந்தாரோ அந்த இலட்சியங்களை முன்னெடுத்து செல்வீர்கள் என்றே நாம் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

நீங்கள் வெற்றிபெற எமது நல்வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
வே. பிரபாகரன்
தலைவர், மத்திய குழு,
இராணுவத் தளபதி,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

www.eelamview.com

www.eelamview.com



# "சாப்ரா, ஷாடில்லா பயங்கரவாதம் பெற்ற இரட்டைக் குழந்தைகள்!





"சென்று வா, வீரனே!
உன் நெஞ்சு கனத்திருக்கிறது
என்பதை நானறிவேன்.
இடிந்து கிடக்கும் உன் சுவர்களை நோக்கி
இனியும் அந்த தாய்கள் ஓடிவரப் போவதில்லை.
உன் உயிரைக் கேட்டார்கள்.
உன் ஒரேயொரு சொத்து அது
அதைக்கூட உன்னிடமிருந்து பறித்து விட்டார்கள்."

(பலஸ்தீனப் பாடல் ஒன்றிலிருந்து)

சாப்ரா—
ஷாடில்லா—
லெபனானில் மேற்கு பெய்ரூட்டின் எல்லையில் அமைந்திருந்த பலஸ்தீனிய அகதிகள் முகாம்கள் இவை.

1982 செப்டம்பர் 16, 17, 18.

இந்த அகதிகள் முகாமுக்குள் இஸ்ரேலிய மிலேச்சப் படைகள் நுழைந்தன. புல்டோசர்கள் இறங்கின. பலஸ்தீன அகதிகளின் வீடுகள் தகர்த்தெறியப்பட்டன. வீட்டுக்குள்ளே இருந்தவர்களுக்கு ஓலமிடுவதற்குக்கூட அவகாசம் கிடைக்கவில்லை. ஒவ்வொரு சந்து வழியிலும் சடலங்கள்—பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள், முதியவர்கள். எந்திரத் துப்பாக்கியால் சுடப்பட்டோ, கத்தியால் வெட்டித் துண்டாடப்பட்டோ சாவைத் தழுவிய நிலையிலே இந்த மனித உயிர்கள்! தலை நசுங்கிப்போன நிலையில் குப்புறக் கிடக்கும் சிசு. வரிசையாக விழுந்து கிடக்கும் சடலங்கள். அந்த சடலங்களுக்கு மேலே — சுவர்களில் காணப்படும் பெருந்துளைகள் அவர்கள் வரிசையாக நிற்கவைத்துச் சுடப்பட்டிருப்பதற்குச் சாட்சி சொல்கின்றன.

ஷாடில்லா அகதிகள் முகாமில் பலஸ்தீனியர்கள் படுகொலைசெய்யப்பட்டு இருபத்து நான்கு மணித்தியாலங்கள் கழிந்த பிறகும்கூட அங்கு எத்தனை பேர் படுகொலை செய்யப்பட்டனர் என்பது பற்றி யாருக்குமே சரியாகத் தெரியாது.

சாப்ரா, ஷாடில்லா அகதிகள் முகாமில் குறைந்தது இரண்டாயிரம் பேராவது படுகொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது.

மனித உரிமைகளின் சிதையின் மீது—காட்டுமிராண்டித்தனத்தின் மீது சமூகங்கள் நிர்மாணம் பெறுகின்றன என்பதை நம்ப மறுப்பவர்களுக்கு இஸ்ரேலின் இந்த அட்டூழியங்கள் நிரந்தரச் சாட்சிகள்.







## சாப்ரா, ஷாடில்லா எதிர்வரும் புதுயுகத்தின் தொட்டில்கள்!

சாப்ரா, ஷாடில்லாவில் கொலை செய்யப்பட்ட பாலஸ்தீன அகதிகளுக்கு எமது ஈராண்டு நினைவஞ்சலி!

www.eelamview.com

www.eelamview.com



# விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு

**தமிழீழப் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வரலாறு விடுதலைப் புலிகளின் வரலாறுதான். ஏனெனில் எமது விடுதலை இயக்கமே தமிழீழ மண்ணில் ஆயுதப் போராட்டத்திற்கான உறுதியான அடித்தளத்தை அமைத்து நீண்ட காலமாக தொடர்ச்சியான நிலையான ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கிறது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமானது பத்து ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது. உருக்குப் போன்ற உறுதியுடனும், உன்னத தியாக உணர்வுடனும் வீர காவியங்கள் படைத்த வீர மறவர்களின் வரலாறு இது. புரட்சிகர வரலாற்றுச் சூழ்நிலையால் பிறப்பெடுத்த விடுதலைப் புலிகள் இயக்கம் தலைமறைவு கெரில்லா அணியாகத் தோன்றி இன்று பரந்துபட்ட மக்களின் அபிமானத்திற்கும் ஆதரவிற்குமுரிய தேசிய விடுதலை இயக்கமாகப் பரிணாமம் பெற்றிருக்கிறது. விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும்போது தமிழீழத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றிய வரலாற்றுப் பின்னணியைக் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.**

LIBERATION TIGERS OF THAMIL EALAM

அஹிம்சா ரீதியிலான — சாத்வீக — சட்டரீதியான — மென்முறை வடிவில் மேற்கொள்ளப்படும் அரசியல் கிளர்ச்சிகள் தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்கப்படும்போது, சாத்வீக அஹிம்சைப் போராட்டங்களில் இழையோடுகிற ஆத்மீக உணர்வுகளை ஒடுக்குமுறையாளன் நிர்த்தாட்சண்யமாக அசட்டை செய்யும்போது அரசியல் கிளர்ச்சியானது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வடிவத்திலேயே வெடித்துக் குமுறுகிறது. இதையே உலகின் ஒடுக்கப்பட்ட மக்களினது சுதந்திரப் போராட்ட வரலாறுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய ஒரு வரலாற்று நியதியிலேயே தமிழ்த் தேசியச் சுதந்திரப் போராட்டமும் நெறிப்படுத்தப்பட்டு, வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது.

தமிழ்மக்கள் காலங்காலமாக அஹிம்சைவழியிலேயே தங்களது அரசியற் போராட்டத்தினை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். தங்களது அடிப்படை மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக காந்திஜியின் அஹிம்சை வழிக் கோட்பாட்டினைப் பின்பற்றியே தமிழ்மக்கள் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். கால் நூற்றாண்டு காலமாக ஒற்றை ஆட்சி அமைப்பிற்குள் சமஷ்டி உரிமை கோரியே தமிழ் மக்கள் போராடி வந்துள்ளனர். பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் இணைந்து வாழ்வதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர். ஆனால் தமிழ்மக்களின் நியாயமான - சட்டபூர்வமான - நாகரிகமான கோரிக்கைகள் அனைத்தும் சிங்கள ஆட்சியாளர்களால் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்தின் உரிமைகளுக்கான போராட்டத்தினை மனிதாபிமான முறையில் தீர்த்து வைப்பதற்கு மாறாக, சிங்கள இனவாத அரசு இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு தமிழ் மக்களின் அஹிம்சா ரீதியிலான சத்தியாக்கிரகப் போராட்டங்களை ஈவிரக்கமின்றி நசுக்கியது. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான ஒரு ஒடுக்குமுறையானது தமிழினத்தின் சமூக அமைப்பின் அடித்தளத்தையே தாக்கியது.

தமிழ்மக்கள் மீதான வன்முறைகள் அலை அலையாகத் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தமிழ் பேசும் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நாசகார இனப்படுகொலைத் திட்டத்தைச் சிங்களப் பேரினவாத அரசே திட்டமிட்டு மேற்கொண்டது. தமிழ்ப் பிரதேசங்களில் பெருமளவில் ஆயுதப் படைகள் குவிக்கப்பட்டன. இறுதியாக, தமிழ்ப்பிரதேசம் பூரண இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு தமிழருக்கெதிரான ஒடுக்குமுறையும், தொடர்ச்சியான இராணுவப் பயங்கர வெறியாட்டமும், சிங்களத் தலைவர்கள் நிரந்தரமாக இழைத்து வந்த நம்பிக்கைத் துரோகங்களும் சமாதானமான முறையில் தங்களின் பிரச்சனைக்குத் தீர்வு காணுவதில் தமிழருக்கிருந்த சகல நம்பிக்கைகளையும் அழித்து விட்டன. அரசியல் அரங்கில் தமிழர்கள் நிராதரவாக்கப்பட்டார்கள்.

வரலாற்றின் இந்த நெருக்கடியான காலகட்டத்தில்தான் புரட்சிகர ஆயுத எதிர்ப்பு இயக்கம் (revolutionary armed resistance movement) தோற்றம் கண்டது. அரசு கட்டவிழ்த்து விட்ட காட்டுமிராண்டித்தனமான, இன அழிவு தழுவிய ஒடுக்குமுறையிலிருந்து தமிழ் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறெந்த வழியும் இருக்கவில்லை. எனவே 1970 களின் ஆரம்பத்தில் தமிழ் மண்ணில் தோற்றம் கண்ட ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை வளர்ச்சியும், விரிவாக்கமும் அடைந்த தமிழரின் அரசியற் போராட்ட வடிவமாகவே நாம் கொள்ள வேண்டும். தாங்கொணா ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட வேண்டிய இறுதிக்கட்டத்திற்கு தள்ளப்படும் மக்கள் வன்முறைப் போராட்டத்தை வரித்துக்கொள்வது தவிர்க்க முடியாததாகிறது. எனவே இந்த வன்முறைப் போர் வடிவமானது எமது அரசியற் போராட்டத்தின் ஒரு புதுமுகத் தோற்றப்பாடன்றி வேறொன்றுமல்ல. இரு தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடு முற்றி, அப்பிரதான முரண்பாட்டின் வரலாற்றுக் குழந்தையாகவே ஆயுதப் போராட்டம் பிறப்பெடுத்தது. இந்த முரண்பாடானது, காலப்போக்கில் அடக்குமுறையையும் அதற்கு எதிரான ஆயுத எழுச்சியையும் படிப்படியாகக் கூர்மையடையச் செய்தது.



குருநகர் முன்னாள் இராணுவ முகாம் தகர்ப்புக்கு பின்-

புரட்சிகரத் தமிழ் இளைஞர்கள் மத்தியிலிருந்தே ஆயுதப் புரட்சிகர இயக்கம் கருக்கொண்டது. தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் கையாண்ட ஒடுக்குமுறை இனவாதக் கொள்கைகளால் தமிழினத்தின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார வாழ்வில் ஏற்பட்ட பாரதூரமான பாதிப்புகளே தமிழ் இளைஞர்களைப் புரட்சிகரப் போராட்டப் பாதையை முன்னெடுக்க நிர்ப்பந்தித்தன. படித்த தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கத்துறையில் வேலைவாய்ப்புகள் பூரணமாக நிராகரிக்கப்பட்டபோது அவர்களுக்கு இருள்மயமான எதிர்காலம் மாத்திரமே மிஞ்சிக்கிடந்தது. சிங்கள அரசாங்கத்தின் பாரபட்சமான — தமிழர்களுக்கு எதிரான 'தரப்படுத்தல்' கல்விக் கொள்கையும், 'சிங்களம் மட்டும்' என்ற மொழிக் கொள்கையும் தமிழ் மக்களின் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பினையும் வேலை வாய்ப்பினையும் இல்லாமல் செய்துவிட்டது. மேலும் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையும் நாளாந்தம் மோசமாகிக் கொண்டிருந்தது. பொலிஸும் இராணுவமும் தமிழ் இளைஞர்களைக் காரணம் ஏதுமில்லாமலேயே கைது செய்தும், மோசமாகச் சித்திரவதை செய்தும் கொன்றும் அட்டூழியங்கள் இழைத்தன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தமிழ் இளைஞர்களே அரச பயங்கரவாதத்திற்கு நேரடியாக இலக்காகி கொடூரமான—மனிதாபிமானமற்ற சித்திரவதைகளை அநுபவித்தனர்.

தொழில் வாய்ப்புகளும் உயர் கல்வி வாய்ப்புகளும் மறுக்கப்பட்ட நிலையில் ஏற்பட்ட விரக்தியும், தொடர்ச்சியான பொலிஸ் இராணுவ அட்டூழியங்களால் சினமும் கொண்ட தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள் தங்களின் இந்த மோசமான வாழ்நிலைமைகளைப் பூரணமாக மாற்றியமைக்கும் ஒரு புரட்சிகர சோஷலிசப் போராட்டத்தின் மூலமே தங்களின் தலைவிதியை மாற்றியமைக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டனர். இளைய தலைமுறையினர் சரியாக உணர்ந்து கொண்டதைப் போல, மோசமாகிக் கொண்டிருந்த தேசிய ஒடுக்குமுறையின் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் மாத்திரமே ஒரேயொரு தீர்வாக எஞ்சி நின்றது. 1970களின் ஆரம்பத்தில், எதேச்சையாகக் கட்டுப்பாடற்ற முறையில் பிரவாகமெடுத்த தமிழ்த் தீவிரவாத இளைஞர்களின் அரசியல் வன்முறை எழுச்சிகள், புரட்சிகர அரசியற் கோட்பாட்டையும் நடைமுறையையும் கொண்ட புரட்சி அமைப்பொன்றை நாடி நின்றன. இந்தப் பிரத்தியேகமான அரசியற் சூழ்நிலையில்தான், அதாவது 1972இல், விடுதலைப்புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. எமது இந்தப் புரட்சி இயக்கம் இன்றைய தலைவரும் இராணுவத்தளபதியுமான வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்டது.

இயக்கம் தொடங்கப்பட்ட அதன் ஆரம்ப காலத்தில் **புதிய தமிழ்ப் புலிகள்** என்ற பெயரில் அழைக்கப்பட்டு, பின் 1976 மே ஐந்தாம் தேதி **தமிழீழ விடுதலைப் புலிகள்** என்று இயக்கம் புதிய பெயரைச் சூட்டிக்கொண்டது. விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே உறுதியும் அர்ப்பணிப்பும் போர்க்குணமும் கொண்ட இளம் புரட்சிவாதிகளை அது பெருமளவில் ஈர்த்துக்கொண்டது. நகர்ப்புறக் கெரில்லா அமைப்பாக உருவாக்கப்பட்டு, தேசிய விடுதலைக்கான நீண்டகால மக்கள் யுத்தம் என்ற இலட்சியத்தில் தோய்ந்த விடுதலைப் புலிகள் இயக்கம் வெகு விரைவிலேயே தமிழ் மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்ட இயக்கமாகப் பரிணமித்தது. விஞ்ஞான சோஷலிசக் கோட்பாட்டை வரித்துக்கொண்ட புரட்சிகர விடுதலை இயக்கம் என்ற வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தேசியப் போராட்டத்தின் முன்னணி ஆயுதப் படையாகத் தன்னை விரைவிலேயே ஸ்தாபித்துக் கொண்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றமானது தமிழ்த் தேசியச் சுதந்திரப் போராட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கமானது இதுகாலம் வரை நடைபெற்றுவந்த தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தினைப் பரந்துபட்ட மக்களின் ஆயுதப் போராட்டம் என்ற எல்லைக்கு விஸ்தரித்தது. எங்களின் காலத்திற்குரிய வரலாற்றுச் சூழ்நிலைகள் அனைத்தையும் பற்றிய நுணுக்கமான பரிசீலனையின் அடிப்படையிலேயே பரந்த வெகுசனப் போராட்டத்தின் வடிவமாக ஆயுதப் போராட்டத்தை நாம் வரித்துக்கொண்டோம். தங்களின் தேசியப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கும் புரட்சிகரமான எதிர்ப்பியக்கத்தைத் தவிரத் தமிழ் மக்களுக்கு வேறு மார்க்கம் எதுவுமேயில்லை என்ற யதார்த்த நிலைமையை முழுமையாகக் கிரகித்த பின்னரே நாம் ஆயுதப் போர் முறையை தழுவிக்கொண்டோம். ஆயுதப் போராட்ட வடிவமாக நாம் வரித்துக்கொண்ட கெரில்லாப் போர் முறையானது எமது தேசியப் போராட்டத்திற்கு மிகவும் பொருத்தமான போர் வடிவமாகும். நிராயுதபாணிகளான—வலிமை குறைந்த தமிழ் மக்கள் சிங்கள இனவாத அரசின் பாரிய இராணுவ வலிமைக்கு எதிராகப் போராடுவதற்கு நீண்டகால கெரில்லா யுத்தப் பாதையே மிகவும் பொருத்தமானது என்பதால்தான் இப்போர் யுக்தியை நாம் கைக்கொண்டோம்.

அரச ஒடுக்குமுறையை எதிர்க்கும் பாதுகாப்பு நடவடிக்கையாகவே எமது ஆயுதப் போராட்டம் ஆரம்பத்தில் அமைந்தது. காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறைக்கு இலக்கான ஒரு சமூகம் என்ற வகையில் ஆயுதம் ஏந்தி எம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை எமக்குண்டு. காலப்போக்கில் அரச பயங்கரவாதம் கூர்மையடைந்து அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி வந்ததால், இந்த வெறியாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் எமது போராட்ட நடவடிக்கைகள் புரட்சிகர எதிர்தாக்குதல்களாக அமைந்தன. எமது கெரில்லாப் போர் யுக்தியை வெறுமனே 'தாக்கிவிட்டு ஓடி மறையும்' தந்திரோபாயம் என விமர்சிப்பவர்கள், கடந்த பத்தாண்டுக் காலமாக விட்டுக்கொடுக்காது, தொடர்ச்சியாக, தீர்க்கமாக நாம் நடத்திய கெரில்லாத் தாக்குதல்கள் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் கணிசமான அளவு எமது போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறது என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அரச ஆயுதப் படைகளை கிலிகொள்ளச் செய்து அவர்களது மனௌறுதியையும், கட்டுப்பாட்டையும் குலைத்து விட்ட எமது கெரில்லாப் போர் முறையானது ஸ்ரீலங்கா அரச அமைப்பையே ஆட்டம்காணச் செய்திருப்பதுடன் தமிழர் பிரச்னையை சர்வதேசமயப்படுத்தவும்

www.eelamview.com


www.eelamview.com



உதவியுள்ளது. கெரில்லாப் போராட்டம் என்பது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம். கெரில்லாப் போர்முறை மக்கள் போராட்டத்திற்கு முரண்பட்டதல்ல. மக்கள் போராட்டத்தின் ஒரு உன்னத வடிவமாகவே அதனைக் கொள்ளவேண்டும். மக்கள் மத்தியில் கருக்கொண்டு, மக்களது அபிலாசைகளின் வெளிப்பாடாக உருவகம் கொள்ளும்பொழுதே கெரில்லாப் போர் வெகுசன போராட்ட வடிவத்தைப் பெறுகிறது. இதனைப் புரிந்துகொள்ளாத சிலர் கெரில்லாப் போர் வேறு, மக்கள் போர் வேறு எனத் தவறாக விமர்சிக்கின்றனர். கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைகொள்ளச் செய்து, அப்போரில் மக்களை நேரடியாகப் பங்களிக்கச் செய்து இப் போர் முறையை பரந்துபட்ட மக்கள் போராக விஸ்தரிப்பதே எமது நோக்கமாகும்.

போராட்டத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. ஆகவே, எமது ஆரம்பகால கெரில்லாப் போராட்ட நடவடிக்கைகள் எமது தமிழீழ மண்ணில் நிலைகொள்ள முயன்ற பொலிஸ் உளவு அமைப்பைச் சிதைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆகவே, இந்தக் கட்டத்தில் ஒடுக்குமுறை அரசின் ஏஜண்டுகளாக எம்மக்கள் மத்தியிலேயே இருந்து கொண்டு இயக்கத்தைக் காட்டிக்கொடுக்கும் கயவர்களை ஒழிக்கும் நடவடிக்கையில் இயக்கம் ஈடுபட்டது. காலகதியில், இத்தகைய பொலிஸ் உளவுப்படை அமைப்பைச் சிதைப்பதிலே நாங்கள் வெற்றி கண்டோம். இதனால் எமது இயக்க அங்கத்தவர்கள் மக்கள் மத்தியில் அரசியற் பணிகளில் ஈடுபடுவதும் கெரில்லாத் தளங்களை அமைப்பதுவும் லேசானதாக இருந்தது.

எமது ஆயுதப் போராட்டத்தின்



1984 ஜுன் 15ம் திகதி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான கடல் விமானம்.

ஒடுக்குமுறை மோசமாகிக் கொண்டு போகும்போது எதிர்ப்பு முறையும் மேலும் உரங்கொண்டு தீவிரம் பெறுவது இயற்கை. சகல புரட்சிகரப் போராட்டங்களிலும் இதுவே சரித்திர நியதியாக இருந்து வந்திருக்கிறது. சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் கைவிட்டு, திட்டவட்டமாகச் சொல்ல முடியாத—'எப்போதோ' வருமென்று கூறப்படுகிற எதிர்காலத்தில், சிறந்த சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, ஒடுக்குமுறைக்கு மாறாக எதிர்ப்பு முறையினைத் துரிதப்படுத்துவதன் மூலமே இந்த முரண்பாட்டினைச் சரியாகக் கையாளுவது சாத்தியமாகும். இதுவே எமது திட்டவட்டமான அரசியல், இராணுவக் குறிக்கோளாகும்.

எமது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கின் பல்வேறு கட்டங்களையும் நுணுகி ஆராய்வதன் மூலமே அதன் அரசியல், இராணுவ, முக்கியத்துவத்தினை விளங்கிக்கொள்ள முடியும். இவற்றைத் தனித்த நிகழ்ச்சிகளாக—'தனி நபர் பயங்கரவாதம்' என்று முத்திரை குத்தி விபரிப்பதை விடுத்து இவற்றை அதன் வரலாற்றுப் பின்னணியிலேயே பரிசீலனை செய்ய வேண்டும்.

எமது இயக்கத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் பொலிஸ் உளவுப்படையின் அமைப்பினைச் சிதைப்பதையே மையமாகக் கொண்டிருந்தன. தமிழ் மக்களின் கிளர்ச்சிகரமான, எழுச்சிகளை நசுக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு தமிழ் பொலிஸ் அதிகாரிகளை அழைத்து வடக்கில் பொலிஸ் உளவுப்படை ஸ்ரீலங்கா அரசு ஏற்படுத்தியிருந்தது. இந்த பொலிஸ் உளவுப்படையில் பொலிஸ் அதிகாரிகள் மட்டுமல்ல, எமது இயக்க நடவடிக்கைகளைப் பற்றித் தகவல்கள் வழங்குவோரும் துரோகிகளும் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் எமது இயக்க நடவடிக்கையைப்பற்றிக் கூறுகிற தகவல்களுக்கு அரசு பெருந்தொகைச் சன்மானங்களை ரகசியமாக வழங்குகிறது. இத்தகைய பொலிஸ் உளவு அமைப்பானது, விசேடமாக அப்போது தான் அரும்பிக் கொண்டிருந்த விடுதலை இயக்கத்திற்கும், பொதுவாக தமிழர்களின் தேசியப்

இரண்டாவது நடவடிக்கை தமிழீழத்தின் பொலிஸ் நிர்வாக அமைப்பை நிலைகுலையச் செய்வதை மையமாகக் கொண்டிருந்தது. அரசபயங்கர வாதத்தின் கோட்டையாக தமிழீழ மண்ணில் செயற்பட்டுக் கொண்டிருந்த—தீவிர உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் நிலையங்கள் மீது கெரில்லாத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

மூன்றாவது கட்டத்தில், எமது கெரில்லாப் போராளிகள் இராணுவப் படைகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். ஆங்காங்கே இராணுவப்படையினர் மீது எமது கெரில்லாப் போராளிகள் மறைந்திருந்து தாக்கியும், நேர்நின்று போரிட்டும் பலத்த சேதங்களை ஏற்படுத்தினர். அந்த படையினர் மத்தியில் பீதியும், மரண பயமும், ஒழுங்கீனமும், கட்டுப்பாடின்மையும் உருவாகின; கூலிப் பட்டாளத்துக்கேயுரிய கோழைத்தனமும் தப்பி ஓடும் மனோபாவமும் வேரூன்றின; பலர் இராணுவ சேவையை விட்டே விலகினர். வடக்கே சேவையில் ஈடுபடும் இராணுவப் படையினருக்கு கூடிய சம்பளமும் அலவன்ஸூம் அரசு வழங்கியது.

அரசியல் ரீதியாக மக்கள் மத்தியில் இயக்கத்தைக் கட்டி எழுப்பும் பணியும், மக்களை அரசியல் மயப்படுத்தும் பணியும் தீவிர முற்றன. எமது அரசியல் அணியின் தொடர்ச்சியான - கடின உழைப்பால் தமிழீழமெங்கும் தலைமறைவு கெரில்லாத் தளங்களை அமைப்பது விரைவிலேயே சாத்தியமானது. மேலும் எமது இயக்கத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், புரட்சிகர புத்திஜீவிகள் ஆகியோர் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

மக்களுடன் வாழ்ந்து, நாளாந்தம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தாமும் முகம் கொடுத்து, அவர்களின் சுகதுக்கங்களில் பங்குகொண்டு, தேசியப் போராட்டத்தில் அவர்களுடன் சேர்ந்து உழைப்பதில் எமது இயக்க அணியினர் பெரும் அக்கறை கொண்டு செயற்பட்டனர்.


தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் சிங்களப் பேரினவாத அரசின் மீதும், இலங்கையின் பொருளாதாரத்தின் மீதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின. தமிழீழ மண்ணில் சிங்கள அரசின் சிவில் நிர்வாகம் பூரணமாக நிலைகுலைந்தது; அரசியல் ஸ்தாபனங்கள் அனைத்தும் செயலிழந்தன; வங்கிகள் மூடப்பட்டன; பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன; அரச அமைப்பே முழுமையாகச் சீர்குலைந்தது. ஸ்ரீலங்கா மோசமான அரசியல், சமூக நெருக்கடியை எதிர்நோக்கியது. தொடர்ச்சியாக நடைபெற்ற வன்முறை சம்பவங்களால் ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் சீரழிந்தது. ஆக, எமது விடுதலைப் போர் சிங்கள ஆளும் வர்க்கத்தையும் சர்வாதிகார அரசினையும் ஆட்டங்காணச் செய்தது. ஸ்ரீலங்கா அரசு உலகிற்கு "பயங்கரவாதம்" என்று காட்டமுயன்ற போலி நாடகம் அரங்கேறவில்லை. எமது தொடர்ச்சியான ஆயுதப் போராட்டம் யதார்த்த நிலையை உலகிற்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது. எமது புரட்சிகர ஆயுதப் போராட்டமே தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் முன்வைத்தது.

எமது கெரில்லா அணிகளை புரட்சிகர மக்கள் இராணுவமாக விஸ்தரித்து, ஆயுதப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும் அடுத்த கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். பரந்துபட்ட பொதுமக்களும் இணைந்து பங்கு கொள்ளும் வெகுஜனத் தேசிய விடுதலைப் போராட்டத்தை இனங்காட்டும் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டம் இது. எமது பொது எதிரியான சிங்கள பேரினவாத அரசுக்கும் அதன் பயங்கரவாத அமைப்புக்கும் எதிராக எம்மோடு தோளோடுதோள் நின்று போராட மற்ற விடுதலை இயக்கங்களும் வந்திணையும் நாள் வெகு தூரத்தில் இல்லை. எமது புரட்சிகரப் போராட்டச் சூழ்நிலைகள் அத்தகைய ஒற்றுமையைச் சாத்தியமாக்கும் என்றே நாம் நம்புகிறோம்.

**விரைவில் வெளிவர இருக்கும் 'விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு' என்னும் நூலில் இருந்து.**



1979 செப்டெம்பர் 7ம் திகதி. தமிழீழ விடுதலைப் புலிகள் வெடிகுண்டு வைத்துத் தகர்த்த ஆவ்ரோ விமானம்.



தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF THAMIL EALAM

25th April 1978

TO WHOM IT MAY CONCERN

The former name of the organisation Tamil New Tigers (T.N.T.) was changed on 5-5-76 and the new name is LIBERATION TIGERS OF TAMIL EALAM. We claim responsibility for the following deaths.

1. Mr. Alfred Duraiappah (Mayor for Jaffna, S.L.F.P. Organiser Northern Region) Shot Dead.
2. Mr. N. Nadarajah (Proprietor Petrol Garage, Urumpirai, and S.L.F.P. Organiser Kopay (Bombed)
3. Mr. A. Karunanithi (C.I.D. Police K.K.S.) Shot dead.
4. Mr. Shanmuganathan (C.I.D. Police, K.K.S.) Same day shot dead.
5. Mr. Shanmuganathan (C.I.D. Police V.V.T.)
6. Mr. Thangarajah (Sec. of the former S.L.F.P. M.P. ... Mr. Arulampalam)
7. Mr. C. Kanagaratnam (MP for Pottuvil Former T.U.L.F. and present U.N.P.)
8. Mr. Bastiampillai (C.I.D. Inspector of Police)
9. Mr. Perampalam (C.I.D. Sub-Inspector of Police)
10. Mr. Balasingam (C.I.D. Sergeant of Police)
11. Mr. Siriwardena (C.I.D. Police Driver).

The Bastiampillai Party came in search of LIBERATION TIGERS of TAMIL EALAM about 5 a.m. on 7th April, 1978 with S.M.G., shot gun, Revolvers and Pistol, and attacked Tigers but the Tigers destroyed them without any death or body injury to Tigers and the car was also destroyed.


No other groups, Organisation or Individuals can claim this death. Serious action will be taken against those who claim the above other than Tigers in Ceylon or Abroad.

We are not responsible for past robberies of any kind.

Secretary
CENTRAL COMMITTEE

T.U.L.F. - Tamil United Liberation Front.
U.N.P. - United National Party.
S.L.F.P. - Sri Lanka Freedom Party.
K.K.S. - Kankesanturai.
V.V.T. - Valvettiturai.
C.I.D. - Criminal Investigation Department.
M.P. - Member of Parliament.

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் இராணுவ நடவடிக்கைகளுக்கு உரிமை கோருகிறார்கள்.



பருத்தித்துறை பொலிஸ் நிலையம், விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டபின்.



விடுதலைப் புலிகளால் சிதைக்கப்பட்ட சிறீலங்கா இராணுவ வாகனம்




பயிற்சி முகாமில் விடுதலைப் புலிகள்.

www.eelamview.com


www.eelamview.com

# தமிழீழ மண்ணில் விடுதலைப்புலிகள்




www.eelamview.com

www.eelamview.com



www.eelamview.com

www.eelamview.com



# தேசிய விடுதலையும் சமூகப்புரட்சியும்

மூன்றும் உலகில் காலனித்துவ அடக்குமுறைக்கு எதிராக ஆயுதப் போர் தொடுத்து வீர காவியம் படைத்த நாடுகளில் ஒன்றுதான் கினி பிஸோ. இந்தச் சிறிய நாடு ஆபிரிக்காவின் தென்மேற்கு கரையோரமாகவுள்ளது. போர்த்துக்கீய காலனித்துவ ஒடுக்குமுறையை எதிர்த்து பத்து ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டு மக்கள் ஆயுதம் தாங்கிய தேசிய விடுதலைப் போரில் ஈடுபட்டனர். இந்தப் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை வழிநடத்தி, அதனை வெற்றிப்பாதையில் இட்டுச்சென்ற பெருமை அமில்கார் கப்ராலைச் சாரும். கினி-பிஸோ நாட்டினதும் அதோடு இணைந்த வேர்தே முனைத் தீவுகளினதும் விடுதலை இயக்கம் 1956ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கினி-வேர்தேமுனை சுதந்திர ஆபிரிக்கக்கட்சி (PAIGC) என அழைக்கப்பட்ட தேசிய விடுதலை இயக்கத்தை ஆரம்பித்து அதன் தலைவராக விளங்கியவர் கப்ரால். ஒரு சோசலிசப் புரட்சிவாதியும் புரட்சிகர சிந்தனையாளரும் என்ற ரீதியில் அமில்கார் கப்ரால் ஆபிரிக்காவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். அவரது சித்தாந்தப் படைப்புகள் உலக விடுதலை இயக்கங்களுக்குத் தத்துவார்த்த வழிகாட்டியாக அமைந்தன.

ஒரு விடுதலை இயக்கத்தை கட்டி எழுப்பி, தேசிய விடுதலைக்கான அரசியல் தத்துவார்த்தக் கொள்கையையும் போர்முறைத் திட்டத்தையும் நெறிப்படுத்துவதாயின் அந்நாட்டு மக்களின் கலாசாரம், பண்பாடு, வரலாறு, வாழ்க்கை முறை ஆகியன பற்றிய ஆழமான பார்வை அவசியம் என்பதை கப்ரால் வலியுறுத்தினார். அதே வேளை சர்வதேசப் புரட்சிகரப் போராட்டங்களின் உலகானுபவத்தைக் கற்றறியும் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்து வந்தார். ஒரு விடுதலைப் போராட்டத்தின் நடைமுறைப் போக்கில், அப்போராட்டத்தின் அனுபவத்தில், அதன் யதார்த்த பரிசோதனைக் களத்தில் நாம் பெறும் அறிவனுபவத்தின் அடிப்படையில்தான் எமது புரட்சிகர சிந்தனையும், செயற்பாடும் நெறிப்படுத்தப்படவேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தேசிய விடுதலைப்போராட்டம் என்பது சமுதாயப் புரட்சியையும் உள்ளடக்கியதாக அமையப்பெறவேண்டும். காலனித்துவ ஏகாதிபத்திய ஒடுக்குமுறை வடிவங்களை உடைத்தெறியும் அதே வேளை சகல ஏற்றதாழ்வுகள், சுரண்டல் முறைகளும் அழிக்கப்படவேண்டும். இன்னொரு வகையில் சொல்வதாயின், தேசிய விடுதலை எழுச்சி ஒரு புரட்சி வடிவம் பெற வேண்டும் என்பதே கப்ராலின் கருத்து.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்தும் புரட்சிவாதிகள் காலனித்துவம், ஏகாதிபத்தியம், நவ-காலனித்துவம் ஆகியனவற்றின் தன்மை பற்றி நன்கு உணர்ந்திருத்தல் அவசியம் என்கிறார் கப்ரால். காலனித்துவம், ஏகாதிபத்தியம் என்பன உலக முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் ஒரு விரிவாக்கமே. உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு நீடிக்கும்வரை அதன் விரிவாக்கம் பின்தங்கிய நாடுகளை விழுங்கிவரும். உலக முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கேற்ப சுரண்டல் முறை வடிவங்களும் மாறிவரும். நவ-காலனித்துவம் என்பதும் புதிய வடிவம் பெற்ற ஒரு சுரண்டல் முறையே. கடனுதவி என்ற போர்வையில் ஒரு போலியான முதலாளி வர்க்கத்தை சிருஷ்டித்து தரகு வர்க்கத்தின் நலன்களைப் பேணி, இவ்வர்க்கத்தினர் மூலம் புரட்சிகர எழுச்சிகளை கட்டுப்படுத்துவதுதான் இன்றைய ஏகாதிபத்தியத்தின் தந்திரோபாயம். மூன்றும் உலகில் சுதேசிய சுரண்டல் வர்க்கங்களுக்கு முண்டுகொடுத்து, சமூக சீர்திருத்தம் என்ற கொள்கைகளின் ஏமாற்றுவித்தையில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை முறியடித்து, இந்நாடுகளில் சர்வதேச மூலதனத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதே இந்த தந்திரோபாயம் என்கிறார் கப்ரால். எனவே தேசிய விடுதலைப் போராட்டங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களாக மாற்றப்படவேண்டும் என்பது அவரது கருத்து. ஒரு நாட்டின் தேசிய உற்பத்தி சக்திகள் ஏகாதிபத்திய சுரண்டல் முறையின்சகலவிதமான ஊடுருவல்களிலிருந்தும் விடுதலை பெறவேண்டும். ஆகவே, நவ-காலனித்துவத்திற்கு எதிரான போராட்டமானது ஒவ்வொரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆணி வேரான அம்சமாக அமையப்பெற வேண்டும் என்கிறார் கப்ரால்.

1973ம் ஆண்டு ஜனவரி மாதம் போர்த்துக்கீய நாசகாரர்களால் கப்ரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1966ம் ஆண்டு ஜனவரியில் கியூபாவின் தலைநகரான ஹவானாவில் நடைபெற்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் முதலாவது மகாநாட்டில் அமில்கார் கப்ரால் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

எங்களுடைய பிரச்சினைகளிலிருந்து மற்றவர்களுடைய பிரச்சினைகள் மாறுபட்டதாக இருக்கலாம். ஆயினும் எமது அன்றாடப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் எமது எதிரிகள் உருவாக்கிவிட்டிருக்கும் பிரச்சினைகளில் எமக்குள்ளேயே நடத்தப்படவேண்டிய உள்போராட்டம் தான் நாம் முகங்கொடுக்க வேண்டிய மிகவும் கடினமான பிரச்சினை என்பதை எமது அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. எமது மக்களின் நலன்களைப் பொறுத்த வரையில் இத்தகைய உள் போராட்டத்தினைக் காலம் தாழ்த்தாமல் மிக் விரைவாக நடத்திவிடுவதே நல்லது. இந்தப் போராட்டமானது எமது ஒவ்வொரு தேசத்தினதும் யதார்த்தமான பொருளாதார, சமுதாய, கலாசார நிலைமைகளில் காணப்படுகின்ற உள்முரண்பாடுகளின் விளைவாகும். இந்த யதார்த்த நிலைமையைத் தெளிவாக விளங்கிக் கொள்ளாத எந்தவொரு தேசியப் புரட்சியோ, சமுதாயப் புரட்சியோ வெற்றியடைய மாட்டாது என்பதில் எமக்குச் சந்தேகம் இல்லை.

"ஓடைநீர் எவ்வளவு வெதுவெதுப்பாக இருந்தாலும் அதில் சோறு சமைக்க முடியாது" என்று ஆபிரிக்க மக்கள் சாதாரணமாகக் கூறுவதுண்டு. இக்கூற்று ஒரு பௌதிக உண்மையை மட்டுமல்ல, ஒரு அரசியல் விஞ்ஞான உண்மையையும் மிக எளிமையாக வெளிப்படுத்துகிறது. வெளிக் காரணங்கள் என்னவாக இருந்த போதும், ஒரு முக்கிய சமுதாய நிகழ்ச்சிப் போக்கு விரிவடைந்து வளர்ச்சியடைவது என்பது அதன் உள்காரணங்களிலேயே தங்கியிருக்கிறது. அரசியலைப் பொறுத்த வரையில், நாம் பின்பற்ற ஆசைப்படுகிற அளவுக்கு மற்ற நாடுகளின் நிலைமைகள் அழகானதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் இருந்தாலும், எமது யாதார்த்த நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாமல் எமது சொந்த முயற்சிகளும் தியாகங்களும் இல்லாமல் எமது சமுதாயத்தை மாற்றியமைத்துவிட முடியாது.

தேசிய விடுதலையும் சமூகப் புரட்சியும் ஏற்றுமதிக்கான வாணிபப் பண்டங்களாக மாட்டா. தேசிய விடுதலையும் சமூகப் புரட்சியும் உள்நாட்டு மற்றும் தேசிய நிலைமைகளின் விளைவுதான். அவற்றின் மீது வெளிக்காரணிகள் சாதகமாகவோ, பாதகமாகவோ என்னதான் செல்வாக்குச் செலுத்திய போதிலும், ஒவ்வொரு நாட்டு மக்களினது வரலாற்று ரீதியான யதார்த்த நிலைமைகள்தான் அந்த நாட்டின் தேசிய விடுதலையையோ சமூகப் புரட்சியையோ நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணியாக அமையும். இந்த யதார்த்த நிலைமையிலுள்ள பல்வேறு அம்சங்களுக் கிடையிலுள்ள முரண்பாடுகளுக்கான சரியான தீர்வில்தான் இத்தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி உறுதிப்படுத்தப்படுகிறது. இந்த உண்மைக்கான மறுக்க முடியாத சாட்சியாகவும் நடைமுறை எடுத்துக்காட்டாகவும் கியூபாப் புரட்சியின் உள்ளடக்கமும் அதன் வளர்ச்சி முறையும் அமைந்துள்ளது. எல்லாக் காலங்களிலும் பூரண சோஷலிஸ எதிர்ப்புச் சக்தியாகவும் வலிமை மிகுந்த ஏகாதிபத்திய நாடுமான அமெரிக்காவிலிருந்து நாற்றுக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவிலேயே இருந்த கியூபாவிலே இந்தப் புரட்சி சாத்தியமாகியது.

இருப்பினும், நாமும் பொதுவாக இதர விடுதலை இயக்கங்களும் (நாம் இங்கு குறிப்பாகச் சொல்வது ஆபிரிக்க விடுதலை இயக்கங்களின் அனுபவங்கள் பற்றித்தான்) எமது போராட்டத்திலுள்ள இந்த முக்கியமான பிரச்சினைக்குப் போதுமான கவனம் செலுத்தவில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டுள்ளோம்.

தேசிய விடுதலை இயக்கங்கள் எந்த யதார்த்தமான வரலாற்று நிலைமையை மாற்றுவதாகக் கூறிக்கொள்கின்றனவோ, அந்த யதார்த்தமான வரலாற்று நிலைமை பற்றிய அடிப்படையான தெளிவு அவற்றிடம் இல்லை. இது அவற்றின் சித்தாந்தக் குறைபாடாகும். இது, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான எமது போராட்டத்திலுள்ள மிகப் பெரும் பலவீனங்களில் ஒன்றாக உள்ளது. எனினும், அக்குறைபாட்டை நீக்கும் பொருட்டு, தத்துவம், நடைமுறை பற்றிய ஒரு பொது மார்க்கத்தை வரையறுப்பதற்கு வேண்டிய பல்வேறு வகைப்பட்ட செழுமையான அனுபவங்கள் எம்மிடமுண்டு என்றே நாம் கருதுகிறோம். தேசிய விடுதலை இயக்கங்களின் இன்றைய நடவடிக்கைகளையும் எதிர்கால நடவடிக்கைகளையும் வலுப்படுத்துவதற்கு இத்தகைய பரந்துபட்ட விவாதங்கள் இன்றியமையாதவை.

தேசிய விடுதலை இயக்கங்களுக்குச் செய்யப்படுகின்ற அரசியல் ரீதியான உதவி, நிதி உதவி ஆயுத உதவி போன்றவற்றுக்குள்ள முக்கியத்துவத்தைவிட இத்தகைய கருத்துப் பரிமாற்றத்தின் முக்கியத்துவம் எந்த வகையிலும் குறைந்ததல்ல.

இந்த நோக்கத்துடன்தான் நாம் **சமூக கட்டமைப்பு சம்பந்தமாக தேசிய விடுதலை இயக்கத்துக்கு உரிய குறிக்கோள்** என்ன என்பது பற்றிய எமது அபிப்பிராயத்தை இங்கு முன் வைக்கிறோம். இந்த அபிப்பிராயம் எமது போராட்ட அனுபவத்திலிருந்தும் பிற அனுபவங்களைத் திறனாய்வு நோக்கில் புரிந்துகொண்டதிலிருந்தும் உருவானதாகும். இதில் ஒரு தத்துவார்த்தத் தன்மை இருப்பதாகக் கூறுபவர்களுக்கு நாம் கூறும் பதில் இதுதான்; எல்லா செயல்முறையும் ஒரு சிந்தனை வடிவத்தை தோற்றுவிக்கவே செய்கிறது. பூரணப்படுத்தப்பட்ட தத்துவத்தைத் தழுவியொரு புரட்சிகூடத்தோல்வியடையலாம் என்பது எப்படி உண்மையோ அதுபோலவே ஒரு புரட்சிகரத் தத்துவம் இல்லாமல் வெற்றிகரமானதொரு புரட்சி சாத்தியமில்லை என்பது உண்மைதான்.

## அமில்கார் கப்ரால்

("வர்க்கப் போராட்டமே வரலாற்றின் உந்து சக்தி" என்ற பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாட்டை கப்ரால் பரிசீலனை செய்கிறார். தமது சொந்த நாட்டில் உள்ள சூழ்நிலையில் இக்கோட்பாட்டைப் பிரயோகிப்பதில் உள்ள சிக்கலை அவர் சுட்டிக்காட்டுகிறார். "வர்க்க அமைப்பு உருப்பெற்றுவந்த காலத்திலிருந்தே வரலாறு ஆரம்பித்ததா? அன்றி வர்க்கப்போராட்டம் தோற்றம் கொண்டதன் பின்பே வரலாறு தோன்றியதா?" என்றகேள்வியை எழுப்பிவிட்டு அவரே விடையளிக்கிறார். "அப்படியானால் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்கப்பிரதேசங்களில் வாழ்ந்தமனிதசமுதாயங்கள் ஏகாதிபத்தியஅடக்குமுறைக்குட்படுத்தப்படும் வரையுள்ள காலப்பகுதிவரை வரலாறு இன்றி வாழ்ந்திருக்க வேண்டும் அன்றி அல்லது வரலாற்றுக்கு வெளியே வாழ்ந்திருக்கவேண்டும் என்று கருதவேண்டிவரும். நாம் இதனை ஏற்க மறுக்கிறோம். ஏகாதிபத்தியத்தின் தாக்கத்தை நாம் கருத்தில் எடுக்காது நோக்குவோமானால், எமது நாட்டிலுள்ள குடிகள், அதாவது கினியாவிலுள்ள 'பாலான்டா,' அங்கோலாவில் உள்ள 'கொனியாமா,' மொசாம்பிக்கிலுள்ள 'மகான்டே' போன்றவர்கள் வரலாறே இல்லாமல் இருந்தார்கள் என்றே கருத வேண்டிவரும்." எமது நாட்டிலும் என்ன நிகழ்ந்தது என்பதைக் கிரகித்தறிந்து சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வரலாற்றின் உந்து சக்தியாக இருப்பது "உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டம்தான்" என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்; வெளியிலிருந்து திணிக்கப்பட்ட ஏகாதிபத்தியமானது தனது நாட்டு மக்களின் உற்பத்தி சக்திகளின் இயல்பான வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்தது. அதனால் வரலாற்று ஓட்டமானது தடைப்பட்டது என்கிறார் கப்ரால். தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் வெகுசன எதிர்ப்பைத் தடுக்கவும் சுதேசிகளிலிருந்து ஒரு "போலி முதலாளி வர்க்கத்தை" (Pseudo-Bourgeoisie) ஏகாதிபத்தியம் உருவாக்கியது என்று கப்ரால் கூறுகிறார். இந்தப்



கினி—பிஸோவின் புரட்சிகர இராணுவ முகாமொன்றின் அலுவலகத்தில் இராணுவ, அரசியல் தலைவர்கள் கலந்துரையாடுகிறார்கள்.

www.eelamview.com

www.eelamview.com



"போலி முதலாளி வர்க்கத்தினை" வர்க்கப் போராட்டத்திலிருந்தோ, உற்பத்திச்சக்திகளின் இயல்பான வளர்ச்சியிலிருந்தோ, தோற்றம் கொள்ளும் தேசிய முதலாளி வர்க்கமாக கருதமுடியாது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்தில் நேச அணிகளை உருவாக்கும் போது கருத்தில் கொள்ளவேண்டிய ஒரு முக்கிய விஷயம் இதுவாகும். கப்ராலின் இந்த வர்க்க ஆய்வு காலனித்துவ சூழ்நிலையை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாகும். நவ-காலனித்துவ சூழ்நிலையில் எழும் வர்க்க முரண்பாடுகளை அவர் வேறுபடுத்தி ஆராய்கிறார்.)

ஒரு தேசியமானது இழந்து போன தனது வரலாற்று ஆளுமையை மீளப் பெறுவதையே தேசிய விடுதலைப் போராட்டம் எனலாம். தன்னை அடிமைப் படுத்தி வைத்திருந்த ஏகாதிபத்திய ஆதிக்கத்தை உடைத்தெறிவதன் வாயிலாக ஒருதேசிய இனம் வரலாற்றை மீண்டும் அரவணைத்துக் கொள்கிறது. இந்த சுதந்திரமே ஒரு மக்கள் சமூகத்தின் இயல்பான வரலாற்று ஓட்டத்தை உத்தரவாதம் செய்கிறது.

## உண்மையான தேசிய விடுதலை

தேசிய உற்பத்திச் சக்திகள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து பரிபூரணமாக விடுதலை பெறும் பொழுதே உண்மையான தேசிய விடுதலை ஏற்படுகிறது என நாம் திட்டவட்டமாகக் கூறலாம். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஒரு அடிப்படையான மாற்றம் ஏற்படுவதுதான் உண்மையான தேசிய விடுதலை என நாம் கொள்வோமாயின், தேசிய விடுதலையை அடிப்படையில் ஒரு சமூகப்புரட்சியுடன் ஒன்றிணைந்ததாகவே கொள்ளவேண்டும். ஒரு புரட்சியை உள்ளடக்கிய அக, புறச்சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வதும், இதே போல ஒரு புரட்சியை வென்றெடுக்க எத்தகைய போராட்ட வடிவம் அவசியமானது என்பதை உணர்ந்து கொள்வதும் முக்கியமானதாகும்.

**காலனித்துவ, நவ-காலனித்துவ சூழ்நிலைகள் சாராம்சத்தில் ஒத்த தன்மைகளைக் கொண்டிருக்கலாம்; ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திலுள்ள** முதன்மையான அம்சம் நவ காலனித்துவ அம்சமாக இருக்கலாம். ஆயினும், இரண்டு சூழ்நிலைகளிலும் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை வேறுபடுத்திப் பார்ப்பது முக்கியமானது என நாம் கருதுகிறோம்.



ஐக்கிய அமெரிக்காவின் லிங்கன் பல்கலைக் கழகத்தினால் கலாநிதிப்பட்டம் வழங்கப் பட்டபோது அமில்கார் கப்ரால் உரையாற்றும் காட்சி.

## காலனித்துவ சூழ்நிலையில்

வர்க்க முரண்பாடுகள் கூர்மையடையாததும், அரசியல் அமைப்பு அற்றதுமான ஒரு புராதன சமுதாயத்தில் காலனித்துவ சூழ்நிலையானது ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாத ஒரு பரந்துபட்ட வெகுசன முன்னணியை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆக்கித்தருகிறது. எனினும் ஒரு உண்மையான தேசிய விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுப்பதற்கு அத்தியாவசியமான வழிமுறைகளை நெறிப்படுத்துவதாயின் சுதேச சமூகக் கட்டமைப்பு, அதன் பரிணாம வளர்ச்சிப்போக்கு ஆகியன பற்றிய தீர்க்கமான ஆய்வு அவசியம். இந்த வழிமுறைகளில் தத்தமது நாட்டிற்கு எது பொருத்தமானது என்பதை அந்தந்த நாட்டுப் புரட்சிவாதிகள் நன்குணர்வர். எனினும் விடுதலைப் போராட்டத்தின் இலக்கையும் அதன் அர்த்தத்தையும் நன்குணர்ந்த ஒரு முன்னணிப்படை கட்டி எழுப்பப்படவேண்டியது இந்த வழிமுறைகளில் முக்கியமானது.

ஒருவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடியதும் பரந்துபட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதுமான முன்னணி வர்க்கமாகத் திகழ்வது தன்னுணர்வு பெற்ற தொழிலாளி வர்க்கமும் கிராமியப் பாட்டாளி வர்க்கமுமேயாகும். ஒரு காலனித்துவ சூழ்நிலை இந்த முன்னணி வர்க்கத்தை அனுமதிப்பதில்லை. இதன் காரணமாக ஒரு முன்னணிப் படையை உருவாக்கும் அவசியம் எழுகிறது. ஒரு காலனித்துவ சூழ்நிலையில் உழைக்கும் பாட்டாளி வர்க்கம் வளர்ச்சி குன்றிய கருநிலையில் தானிருக்கும்; தேசிய விடுதலைப் போராட்டத்தின் மிக முக்கிய பௌதிக சக்தியாக விளங்கும் விவசாய வர்க்கமும் பொருளாதார, சமூக, கலாசார அழுத்தங்கள் காரணமாக விழிப்புணர்வு குன்றிய நிலையில் இருக்கும்; ஆகவே, போராட்டத்தின் முதன்மையான சக்திகளான இவ்விரு வர்க்கங்களும் உண்மையான தேசிய விடுதலைப்போராட்டத்திற்கும் போலியான தேசிய சுதந்திரத்திற்கும் மத்தியில் உள்ள வேறுபாட்டினைத் தாமாக உணர்ந்து கொள்ள முடியாதநிலையில் இருப்பார்கள். ஒரு புரட்சிகர முன்னணிப்படையால்தான் இந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்ளமுடியும். இம்முன்னணிப்படை செயல் திறன்மிக்க—சிறிய சக்தியாகவே இயங்கும். ஆரம்பத்தில் இருந்தே அரசியல் விழிப்புணர்வுடன் காணப்படும் இம்முன்னணிப்படை போராட்டம் வாயிலாக இவ்வேறுபாட்டினை வெகுசனத்திற்கு உணர்த்தி விடுகிறது.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் அடிப்படையான அரசியல் தன்மைகளை மக்களுக்குத் தெளிவுப்படுத்தும் இந்த முன்னணிப்படையானது தேசிய விடுதலைக்கான போராட்ட வடிவத்தினையும் நெறிப்படுத்திக்கொள்கிறது.

## நவகாலனித்துவ சூழ்நிலையில்

ஒரு நவகாலனித்துவ சூழ்நிலையில் சுதேச சமுதாயக் கட்டமைப்பானது - பாரிய சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டு காணப்படும். சுதேசிய சக்திகளைக் கொண்ட ஒரு தேசிய அரசை, யொத்த அரசியல் அதிகார பீடம் இருந்துவரும். இவை காரணமாக சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகள் மேலும் கூர்மையுறுகின்றன. இதனால் காலனித்துவ சூழ்நிலையைப் போலல்லாது ஒரு பரந்துபட்ட வெகுசன முன்னணியைத் தோற்றுவிப்பது சிரமமானகாரியமே. இந்த வெகுசன முன்னணியைத் தோற்றுவிக்கும் வர்க்கங்களை அணிதிரட்ட முடியாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, பொருளாதாரத் தாக்கங்கள். ஒரு தேசிய அரசியல் அமைப்பும் வாணிபத்துறையில் பொருளாதார முயற்சிகளை மேற்கொள்ளும் சுதேசிய முதலாளித்துவ வர்க்கமும் ஏற்படுத்தும் தாக்கங்கள்.



கினி—பிஸோ சுதந்திர ஆபிரிக்கக் கட்சியின் உறுப்பினர் களின் அணிவகுப்பைப் பார்வையிடும் காட்சி

இரண்டாவதாக, மனோரீதியான தாக்கங்கள். தம்மவரைத்தாமே ஆளுகின்ற வாய்ப்புக் கிடைத்தமையால் ஆளும் வர்க்கத்தினரிடம் ஏற்படும் திமிர் மனோபாவம், ஒன்றில் ஒன்று சார்ந்து நிற்கும் சமய அமைப்பையும் பழங்குடிச் சமூக அமைப்பையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஒரு சில தலைவர்களதும் சில புல்லுருவிகளதும் மனப்பாங்குகளினது தாக்கங்கள்.

அதே வேளையில் தேசாபிமான உணர்வைத் தட்டி எழுப்பி வெகுசனங்களை ஓரணியில் திரட்டக் கூடிய சாதகமான வேறு பல அம்சங்களையும் நவகாலனியச் சூழல் பிறப்பிக்கிறது. நவகாலனித்துவ அரசின் அடக்குமுறையும், வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைதலும், அந்நிய ஆதிக்கக் கூலிகளின் பிரசன்னமும், விவசாயிகள் மத்தியில் அதிகரித்து வரும் வறுமையும் இச்சாதகமான சூழ்நிலைகளாகும். இவை பரந்துபட்ட வெகுசன அரங்கில் ஒரு விழிப்புணர்வைப் பிறப்பித்து, இவ்விழிப்புணர்வின் அடிப்படையில் தேசிய விடுதலை என்ற இலட்சியத்தில் பொது மக்களை அணி திரட்டும் வாய்ப்பினை ஏற்படுத்துகிறது.

மேலும், உள்நாட்டு ஆளும் வர்க்கம் படிப்படியாக முதலாளி வர்க்கமாக மாறிவரும் அதே வேளையில், ஏகாதிபத்தியத்தின் மறைமுகச் சுரண்டலுக்கு உட்பட்ட நகரப்புறத் தொழிலாளரும் கிராமப்புற பாட்டாளிகளும் அடங்கிய ஒரு உழைக்கும் வர்க்கத்தின் வளர்ச்சியானது தேசிய விடுதலை பற்றிய புதிய பார்வையைத் தோற்றுவிக்கிறது. இந்த உழைக்கும் வர்க்கமானது ஒரு குறிப்பிட்ட அளவு அரசியல் விழிப்புணர்வைப் பெற்றிருக்கும். இந்த அரசியல் விழிப்புணர்வும் அவர்களது வறுமை பற்றிய பிரக்ஞை என்ற அளவிலேயே இருக்கிறது. இந்த வர்க்கமானது நவகாலனித்துவச் சூழ்நிலையில் ஒரு உண்மையான வெகுஜன ஆதரவு பெற்ற முன்னணிப் படையாகத் தன்னை ஆக்கிக்கொள்ளத் தயாராயிருக்கும். ஆயினும் இந்த முன்னணி வர்க்கமானது ஏனைய சுரண்டப்படும் வர்க்கங்களாகிய விவசாயிகள் (கூலி விவசாயிகள், குத்தகை விவசாயிகள், சிறு விவசாயிகள், சிறு காணிச் சொந்தக்காரர்கள்) மற்றும் தேசாபிமானம் கொண்ட குட்டி முதலாளி வர்க்கத்துடனும் இறுக்கமாக ஒன்றிணையாது போனால் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற கட்டுக்கோப்புக்குள் தனது வரலாற்றுக் குறிக்கோளை அடைய முடியாது போகும். (சுதந்திரத்தை வென்றெடுப்பதுடன் மட்டும் உண்மையான தேசிய விடுதலைப் போராட்டம் முற்றுப்பெறுவதில்லை.) இந்த வர்க்கக் கூட்டணி சாத்தியப்பட வேண்டுமானால் இறுக்கமாகக் கட்டி எழுப்பப்பட்ட அரசியல் அமைப்பின் கட்டுக்கோப்பிற்குள் (அதன் செயற்பாடுகள் மூலமாக) தேசிய சக்திகள் ஒன்று திரட்டப்பட்டு ஸ்தாபனப்படுத்தப்பட வேண்டும்.

## தேசியவர்க்கம்

காலனித்துவ, நவகாலனித்துவ சூழ்நிலைகளில் உள்ள மற்றுமொரு முக்கிய வேறுபாடு போராட்டம் பற்றிய பார்வையில் தங்கியிருக்கிறது. காலனித்துவ சூழ்நிலையில் **ஒரு தேசிய வர்க்கம் (Nation Class)** தனது காலனி ஆதிக்க முதலாளி வர்க்கத்தின் ஒடுக்குமுறைச் சக்திகளுக்கு எதிராகப் போராடுகிறது. இதனால் மேலெழுந்தவாரியாகவாவது இங்கு ஒரு தேசியத்தீர்வை—ஒரு தேசியப்புரட்சியை முன்னெடுப்பது சாத்தியமாகிறது. இந்தத் தேசியத்தீர்வு அடிப்படையில்/ ஒரு தேசம் தனது சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்கிறது; தனக்கு மிகவும் வசதியானது என அனுமானித்துக் கொள்ளும் ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்கிக் கொள்கிறது. நவகாலனித்துவ சூழ்நிலையிலேயோ நிலைமை மாறுபட்டது. இங்கு உழைக்கும் வர்க்கங்களும் அவற்றின் நேசசக்திகளும் ஏககாலத்தில் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்திற்கு எதிராக—சுதேசிய ஆளும் வர்க்கத்திற்கு எதிராகப் போராட்டத்தில் குதிக்கின்றன. ஒரு தேசியத் தீர்வைக் கொண்டு இந்த நிலைமையைச் சமாளித்துவிட முடியாது. (இங்கு ஏகாதிபத்தியம் உள்நாட்டில் திணித்துவிட்ட ஒரு முதலாளித்துவக் கட்டமைப்பை உடைத்தெறியவேண்டிய தேவை ஏற்படுகிறது.) எனவே இங்கு ஒரு சோசலிசப் புரட்சி மூலமே உண்மையான தீர்வு ஏற்பட முடியும்.

## வன்முறையும் புரட்சியும்

**ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு மூலமாக இருப்பது வன்முறையாகும்.** இன்றைய உலகானுபவம் இந்த உண்மையைப் பகர்கிறது. **ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்பது ஒரு புரட்சிதான்** என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்வோமாயின்—ஒரு தேசியக் கொடியை உயர்த்திவிடுவதாலோ அன்றி, ஒரு தேசிய கீதத்தைப் பாடி விடுவதாலோ இந்தப்புரட்சி முடிவடைந்து விடுவதில்லை என்பதை ஒப்புக்கொள்வதாயின், ஏகாதிபத்திய ஏஜண்டுகளின் கொடிய வன்முறைக்கு எதிராகத் தமக்கு விடிவைக் கொண்டு வரும் ஒரே வழிமுறை என்ற வகையில் வன்முறையைத் தேசிய சக்திகள் பிரயோகிக்கத் தவறினால் தேசிய விடுதலை என்பது சாத்தியமே இல்லை; அது தேசிய விடுதலையும் ஆகமாட்டாது. ஏகாதிபத்திய ஆதிக்கம் என்பதே தேசியச் சக்திகளுக்கு எதிராகத் தொடுக்கப்படும் நிரந்தரமானவன்முறை என்பதை ஏகாதிபத்தியத்தின் தன்மைகளை அறிந்தவர்கள் நன்குணர்வர். உயிர்ப்பலியைக் கொடுக்காமல் ஏகாதிபத்திய அடக்குமுறை ஆட்சிக்கு—காலனித்துவ அல்லது நவகாலனித்துவ ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்து தேசிய சுதந்திரத்தைப் பெற்றெடுத்த எந்த ஒரு மக்கள் சமுதாயத்தையும் உலகில் நாம் காண முடியாது. ஏகாதிபத்திய வன்முறைக்குப் பதிலடி கொடுப்பது என்ற நிலையில் மட்டுமல்லாது உண்மையான தேசிய விடுதலை என்ற உன்னத லட்சியத்தின் இறுதி வெற்றிக்கு உத்தரவாதம் செய்தாக வேண்டும் என்ற வகையிலும் **எந்த வடிவங்களில் வன்முறையை நாம் வரித்துக் கொள்வது** என்பதுதான் இங்கு முக்கியமான விடயம்.

சில நாட்டு மக்களின் வாழ்வில் ஏற்பட்ட கடந்தகால, நிகழ்கால அனுபவங்களையும் உலகத் தேசிய விடுதலைப் போராட்டங்களின் உண்மை நிலைமைகளையும் (குறிப்பாக வியட்நாம், காங்கோ, சிம்பாபுவே - ஆகிய நாடுகளில் கிளர்ந்துள்ள தேசிய விடுதலைப் போராட்டங்களின் நிலைமைகள்) சமாதானப் பாதை என்ற மார்க்கத்தைக் கடைப்பிடித்துச் சுதந்திரமடைந்த சில நாடுகளில் நிலவும் நிரந்தரமான வன்முறையையும் முரண்பாடுகளையும் நாம் சீர்தூக்கி பார்க்கும்போது ஏகாதிபத்தியவாதிகளுடன் செய்து கொள்ளும் சமரசங்கள் எவ்விதப் பயனுமற்றவை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தேசிய விடுதலைக்கு ஆயுதந்தாங்கிய வன்முறைப் போராட்டமே ஒரே வழி என்ற நிர்பந்த நிலையை ஏகாதிபத்திய அடக்குமுறையானது மக்கள் மீது திணித்துவிட்டிருக்கிறது. மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து தேசிய விடுதலையை வென்றெடுப்பதற்கான ஒரே பாதை—தீர்க்கமான பாதை ஆயுதப் போராட்டப் பாதைதான் என்று நாம் வலியுறுத்தும்போது யாருமே அதிர்ச்சி அடையத் தேவையில்லை. தமது மக்களின்

11ம் பக்கம் பார்க்க

www.eelamview.com

www.eelamview.com



# இராசரத்தினம்

## டயரி 1974



தமிழர் விடுதலை கூட்டணியின் விசுவாசம் மிக்க இத்தொண்டன் ஆஸ்த்மா நோயுடன் சென்னைத் தெருக்களிலே பசியால் வாடிய வரலாறு பரிதாபமானது. இவர் மறைந்ததும் 'தேசாஜி' என்று வர்ணித்து இவரது உடலின் மீது உதய சூரியன் கொடியைப் போர்த்தி கூட்டணி அரசியல் வியாபாரம் நடத்தியது. இந்த டயறி கூட்டணியால் வஞ்சிக்கப்பட்ட ஒரு தொண்டனின் நெஞ்சின் நெருப்பு.

ஞாயிறு 31, மார்ச்

பெரியவருக்கு 76வது பிறந்தநாள் விழா சென்னை பெரியார் திடலில் நடைபெற்றது.

இவ்விழா நடைபெற்ற மண்டபத்திற்கு இலங்கை பாது காப்புத் துறையைச் சேர்ந்த பஸ்தியாம் பிள்ளையும் இரண்டு சிங்கள காவல்காரரும் வந்திருந்தனர். திருமதி. பாருவிற் கும் கடிதம் எழுதினேன்.

வெள்ளி 5, ஏப்ரல்

பணமில்லாததினால் சோறு உண்ணவில்லை. இட்டலி, தேநீருடன் பொழுதைக் கழித்தேன். தமிழன் என்றுதான் உணரப்போகிறானோ தெரியவில்லை.

திரு. வி. தருமலிங்கம் பா. உ. 10/4ல் சென்னைக்கு வருவ தாக லண்டனிலிருந்து திரு. சனுவிற்கு எழுதியிருந்தார்.

புதன் 10, ஏப்ரல்

திரு. வி. தருமலிங்கம் அவர்களைச் சந்தித்தேன். லீலா விடம் புகைப்படத்தையும் சுவெற்றரையும் ஒப்படைத்தேன். இலங்கையைப்பற்றி வழக்குத் தாக்கல் செய்த திரு. சாமி அவர்களை, திரு. தருமலிங்கத்திற்கு அறிமுகம் செய்து வைத்தேன்.

வியாழன் 11, ஏப்ரல்

திரு. தருமலிங்கம் அவர்களுடன் அமைச்சுகளுக்குச் சென்றேன்.

சனி 1, ஜுன்

பணம் 100/- ரூபா வங்கியில் எடுத்தேன். பல்கலைக் கழகத்திற்குச் சென்று Foreign Notices of South India From Magesthenes To Ma Huan என்னும் நூல் வாங்கினேன்

இந்நூலை வாங்கியதற்கு மகிழ்ச்சி அடைந்தேன். ஈழத் தமிழர்கள்தான் அங்கு மூத்த குடியினர் என்பதற்கு மேலதிகமான தகவல்கள் சில இருந்தன.

சனி 8, ஜுன்

வைத்தியசாலைக்குச் சென்றேன். திரு. சிவகுமாரன் இறந்த செய்தியை இன்று அறிந்தேன். கவலைப்பட்டேன், கண்ணீர் விட்டேன்.

ஈழத்தமிழரின் உரிமைக்காகத் தனது உயிரைப்பலி கொடுத்த உத்தமத் தியாகி அவர் வீர மரணமடைந்து விட்டார். அவரது ஆத்துமா சாந்தியடைக.

சனி 22, ஜுன்

திருமதி. வ. ந. நவரத்தினம் இன்று காலையில் என்னுடன் பேசினார். ஆனால் நான் தவிர்த்துக்கொண்டேன்.

செவ்வாய் 25 ஜுன்

சிங்கப்பூர் திரு. ஜபார், திரு. ஜனு, சினிமா நடிகர் முஸ்தபா அவர்களும் எங்களது கடைக்கு வந்து பார்வையிட்டார்கள்.

திருமதி. நவத்தின் முந்நிலையில் நான் எவருக்கும் உதவி செய்யவில்லையென்று காண்டீபன் கூறினார். இவ்வார்த்தை ஈட்டியால் என் உள்ளத்தில் குத்துவதைப் போன்றிருந்தது. ஏனெனில், சென்றஆண்டு செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் என்னுடம் உணவு உண்டவர். அதற்கு ஒரு சதம் கூடத்தரவில்லை. இவ்வாறு நான் செய்ததையே மறந்து நன்றி கெட்டத்தனமாகக் கூறினார்.

திங்கள் 1, ஜுலை

இன்று காலையில் சகுனியான ரகுபதிநவத்துடன் தர்க்கம் செய்தேன். எவரிடமோ கொடுக்கப்பட்ட 35/-ரூபாவிற்கு என்னிடம் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டினார் இந்தத் நாடகை. இவன் தன்மைகள், யோக்கியதைகள் யாவும் அரக்கத்தன்மையுடையவை. வெறுத்து ஒதுக்கப் படவேண்டியவன். பகட்டாக உயர்நிலையைக்காட்டும் இழிவு மனப்பான்மையுள்ளவன். இவனின் மூர்க்கத்தனத்தினால் நான் அவமானப்பட்டேன். வேதனைப்பட்டேன். உள்ளம் கறைபடிந்துள்ளது.

புதன் 4 செப்டம்பர்-

தாமிரபருணி புதிய புலிகள் என்னும் பெயரை உரு வாக்கி கொடுத்தேன். அதன் உள்ளாக்க கருத்தையும் விளக் கித் தங்கத்திடம் கூறினேன். அவரும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். இது ஒரு புதிய சகாப்தம்.

கம்பெனிப் பிரயாணத்திற்குரிய முதலாவது வண்டியில் நானும் திரு. கழுகும் ஏறி வந்தோம். திரு கஜன் என்னைச் சந்தித்தார்.

வியாழன் 5, செப்டம்பர்

கடையிலேயே தங்கியிருந்தேன். எங்களது முதலாவது ரூரிஸ் பஸ் இன்று அதிகாலை 5-00 மணிக்கு புறப்பட்டு சென்றது. டி. என். டி. க்குரிய உறுதிப் பிரமாணத்தையும் குறிப்புகளையும் வரைந்தேன்.

புதன் 23, ஒக்டோபர்

பணமில்லாததினால் இட்டலியும், பாணும் உண்டு பசியைப் போக்கினேன். மருமகன் என்னைச் சந்தித்தார். நிர்மலாவைச் சந்தித்துப் பணம் தரவை தருவதாகக் கூறினேன்.

வியாழன் 24, ஒக்டோபர்

இன்றும் பணமில்லாதபடியால் சோறு உண்ணவில்லை. என்ன ஊழ்வினையோ தெரியவில்லை இறைவா. இவ்வாறு எவ்வளவு காலம் பட்டினிவாழ்வு? சனு புதுடில்லி சென்றார்.

மருமகன் வந்தார். எனது தொய்வு நோய் இனிமேல் குணமாகிவிடுமென அன்னை மாயம்மா காட்சி கொடுத்துக் கூறினார். அவவின் அனுமதியுடனும், ஆசியுடனும் விபூதியை நீரில் கலந்து திரு. பாண்டி என்னிடம் தந்தார். நான் அதை வாங்கிக் குடித்தேன்.

ஞாயிறு 27, ஒக்டோபர்

திரு. மகேஸ்வரனையும் துணைவியையும் சந்தித்தேன். 20 ரூபா தந்தார். அதன் பின்புதான் கடைக்கு சென்று உணவருந்தினேன். பகல் முழுவதும் பட்டினி இருக்க இடமில்லை. உண்பதற்குப் பணமில்லை. வசந்தனைச் சந்தித்தேன். சில உறுதியான முடிவுகளைச் செய்தேன் கவலையினால் தூக்கமில்லை. காலையில் ஒரு தேநீர் குடித்துவிட்டு பகல் 2-30 மணி வரையும் மத்திய புகைவண்டி நிலையம் Platform இல் குந்திக் கொண்டிருந்தேன்—பசியினால் சோர்ந்து போயிருந்தேன்—அப்போது தான் திரு. மகேஸ்வரன் என்னைச் சந்தித்தார். அவரது உதவியை என்றுமே மறக்க இயலாது. அந்தப் பணத்தில் எனக்குத் துரோகமிழைத்த சுந்தரத்திற்கு இரவுணவு வாங்கிக்கொடுத்தேன்.

செவ்வாய் 4, நவம்பர்

காய்ச்சல் இருந்தது. வீட்டிலேயே தங்கியிருந்தேன். பசியின் கொடுமை அதிகமாக இருந்தது. இரவு முருகன் ரூபா 10 கொண்டு வந்து தந்தார். கண்ணனுக்கு கடிதம் எழுதினேன்.

வியாழன் 7, நவம்பர்

திரு. ஞானரத்தினத்தின் பதிவுக் கடிதம் இன்று எடுத்தேன். இருமலும் காய்ச்சலும் அதிகமாக இருந்தது. மூன்று பிளேடுகள் அனுப்பியிருந்தார். பணமில்லாதபடியால் இரண்டு 'பன்' வாங்கிச்சாப்பிட்டுப் படுத்துவிட்டேன்.

வெள்ளி 29, நவம்பர்

இராமநாதசுவாமி சத்திரத்தில் தங்கியிருந்தேன்.

சனி 30, நவம்பர்

சத்திரத்தில் தங்கியிருந்தேன்.

ஞாயிறு 1, டிசம்பர்

சத்திரத்தில் தங்கியிருந்தேன்.

ஒக்டோபர் 4, வியாழன்

தொய்வுக்குணமிருந்தது. நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தைப் பற்றிய செய்தியை இங்குள்ள எல்லாப் பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன.

ஒக்டோபர் 8, ஞாயிறு

தொய்வுக்குணமிருந்தது ஆங்கிலத்தில் துண்டுப்பிரசும் இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பற்றித் தயார் செய்தேன் திரு. சுந்தரம், புருஷோத்தமன் ஆகியோரைச் சந்தித்தேன்

ஒக்டோபர் 9, செவ்வாய்

வீடு இன்று ஒப்படைத்தேன்—கனடாவிலிருந்து 'மீண்டும் எரிகிறது' இலங்கை என்னும் நூலை அனுப்பக் கோரியிருந்தார்கள். மகிழ்ச்சிக்குரியது—புகைப்படங்கள் கொடுத்தனுப்பினேன்—சின்னண்ணருடன் அதிகாலையில் கதைத்தேன்—சுதந்திரன் கிடைத்தது.

ஒக்டோபர் 20, சனிக்கிழமை

வீட்டு வாரியம் அலுவலகத்திற்கு சனுவும், நானும் சென்று வீடு திருப்பிக் கொடுத்த விபரங்களை காட்டினோம். பணமில்லாததினால் மூன்று இட்லியுடன் இரவுணவைச் சமாளித்துக் கொண்டேன். தமிழனத்தின் சுய உரிமைக்காக போராடும் எனது இன்றைய நிலை பசி, பட்டினி, என்ன செய்வது? யாரை நோவது?

ஒக்டோபர் 21, ஞாயிறு

காலையில் சாப்பிடவில்லை. பகல் இரண்டு தோசை இரவு சிறு துண்டு பாண் 26 காசு இது எனது நிலை பசி. உண்பதற்கு பணமில்லை. இதை எழுதுவதில் எவ்விதமும் எனக்கில்லை. காரணம் நன்றியில்லாத தமிழனம்.

ஒக்டோபர் 22, திங்கள்

சனு வங்கியில் கடன் எடுத்துப் பணம் தந்தார். அரிசி வாங்கி சமைத்தோம். திரு. G.G. பொன்னம்பலம், பிரதம அமைச்சர் திருமதி. சிறிமாவோ பண்டார நாயகாவைச் சந்தித்து உணவுப் பிரச்சனையைப் பற்றி பேசியதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது. திரு. பொன்னர் இன்னும் என்னென்ன, துரோகங்கள் தமிழினத்திற்குச் செய்யப் போகின்றாரோ தெரியவில்லை.

டிசம்பர் 22, சனி

அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற தமிழின ஆராய்ச்சி மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் கொழும்பு செல்வி துஷிதா திருநாவுக்கரசும் பங்கு பற்றினார்.

டிசம்பர் 25, செவ்வாய்

எனக்கு இன்று வயிற்றோட்டம் அதிகமாக இருந்தது. பெரியாரின் சடல இறுதி ஊர்வலத்தைத் தரிசிப்பதற்காக எழும்புருக்குச் சென்று தினத் தந்தி அலுவலகத்திற்கு முன்பு நின்று பார்வையிட்டேன். ஊர்வலம், முடிந்ததும், கல்லெறியினால், சனம் இங்கும் அங்கும், ஓடியது. நானும், அதில் அகப்பட்டு நசிபட்டேன். திரு. பின்னை இரவு புகை வண்டியில் சிதம்பரம் சென்றார்.

www.eelamview.com

## அமில்கார் கப்ரால்.......

விடுதலைக்காகப் புரட்சிகரப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சகலருக்கும், சமகால உலக விடுதலைப் போராட்டங்கள் உணர்த்தும் மாபெரும் படிப்பினை இதுதான்.

ஆயுதப் போராட்டப் பாதையின் விளைவுகளைப் பொறுத்த வரையில் தேசிய விடுதலைக்குப் பின்பு ஒரு ஸ்திரமான நிலைமை இருக்க வேண்டுமாயின் எவ்விதம் போராட்டப்பாதை நெறிப்படுத்தப்பட்டது என்பது மட்டுமன்றி காலனித்துவம், நவகாலனித்துவம் ஆகியன விதைத்து விட்ட மரபுப்பண்புகளிலிருந்து மக்கள் எவ்விதம் அரசியல் விழிப்புணர்வு பெற்றுள்ளனர் என்பதிலேயே தங்கியிருக்கிறது. ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் நிதர்சனத்தைப்பற்றியும் ஏகாதிபத்தியத்திடமிருந்து சுவீகரித்துக் கொண்ட அரசமைப்பின் தன்மை பற்றியும் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்கக் கூடிய ஒரு சமூகப் பிரிவென்றால் அது குட்டி முதலாளித்துவ வர்க்கம்தான். ஆனால் இந்தக் குட்டி முதலாளித்துவத்திற்கே உரிய இயல்பான குணநிசயங்களையும் உறுதியற்ற நிலைப்பாட்டினையும் கருத்தில் கொள்வோமாயின் இது தேசிய விடுதலை இயக்கத்தின் பலவீனங்களில் ஒன்றாக இருப்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

காலனித்துவ சூழ்நிலையில் சுதேசிய "போலி முதலாளித்துவ வர்க்கம்" வளர்ச்சிகாண வாய்ப்பிருப்பதில்லை. அதேபோல தேசிய விடுதலைப் போராட்டம் கூர்மையடையும் வரை பாந்துபட்ட வெகுஜனங்கள் அரசியல் விழிப்புணர்வு கொண்டிருப்பதில்லை. இதன் காரணமாகக் குட்டி முதலாளிவர்க்கமானது அந்நிய ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கும் வரலாற்று வாய்ப்பைப் பெறுகிறது. அகநிலை, புறநிலைகள் காரணமான குட்டி முதலாளி வர்க்கம் அரசியல் விழிப்புணர்வு பெறுவதற்கு பல வாய்ப்புகள் உண்டு. சாதாரண வெகுஜனங்களிலிருந்து உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை இவர்கள் அடைந்திருக்கிறார்கள்; ஏகாதிபத்திய ஏஜண்டுகளுடன் இவர்களுக்கு நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன; இத்தொடர்புகளின் காரணமாக அவமதிப்பிற்குள்ளாகும் சந்தர்ப்பங்களும் இவர்களுக்கு ஏற்படுகின்றன; இவர்களது கல்வித்தரமும் அரசியல் பக்குவமும் உயர் நிலையில் காணப்படுகின்றன. இதன் காரணமாக இவ்வர்க்கமானது அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டாக வேண்டுமென்ற தேவையை துரிதகதியில் கிரகித்துக் கொள்கிறார்கள். இவ்விதம் காலனித்துத்துவ சூழ்நிலையில் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பிரிவு தன தாக்கிக்கொண்டிருக்கிற இந்த வரலாற்றுப் பொறுப்பைப் புரட்சிகரமானது என்று கூறலாம். அதே வேளை இந்தக்குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஏனைய பிரிவுகள் தமது நலன்களையும், சலுகைகளையும் பேணுவதற்காகக் காலனித்துவத்துடன் இணைந்து போகின்றன.

நவகாலனித்துவச் சூழ்நிலையில் தேசிய விடுதலை வெற்றிக்காண வேண்டுமாயின் சுதேசியப் போலி முதலாளி வர்க்கம் தகர்த்தெறியப்பட வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதன் காரணமாக அந்நிய ஆதிபத்தியத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் குட்டி முதலாளித்துவ வர்க்கத்திற்குகூட முதன்மையான—முக்கியமான பங்கு வகிக்கிற வாய்ப்புக் கிடைக்கிறது. இந்தச் சூழ்நிலையில் சமூகக் கட்டமைப்பு வளர்ச்சி நிலை கண்டிருப்பதால் விழிப்புணர்வு பெற்ற தொழிலாளர் வர்க்கப் பிரிவினரும், தேசாபிமான உணர்வுடைய தேசிய "போலி முதலாளித்துவ வர்க்க" சக்திகளும் போராட்டத்தின் தலைமைப் பீடத்தில் பங்கேற்கின்றன. நவகாலனித்துவச் சூழ்நிலையில் குட்டி முதலாளித்துவ வர்க்கம் போராட்டத் தலைமையில் பங்கு கொள்வது ஒரு முக்கிய அம்சமாக இருப்பதற்குக் காரணங்கள் உண்டு. ஒன்று, புரட்சிகரப்பாட்டாளி வர்க்கமானது தனது பொருளாதார, கலாசார வரையறைகளை உணர்ந்திருக்கலாம் அல்லது தேசாபிமானங்கொண்ட போலி முதலாளித்துவ வர்க்கத்தின் சித்தாந்த ரீதியான குழப்ப நிலை காரணமாக இருக்கலாம். இதன் காரணமாக குட்டி முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஆழ்ந்த புரட்சிகர விழிப்புணர்வையும், போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் மக்களின் உண்மையான அபிலாஷைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு அதை நேர்மையாகத் தெளிவுபடுத்தும் ஆற்றலையும், மக்களோடு தங்களை இனங்கண்டு கொள்ளும் தன்மையையும் பெற்றுக்கொள்வதற்கு இந்த வரலாற்றுச் சூழ்நிலை இந்த வர்க்கத்தை நிர்ப்பந்திக்கிறது.

இவ்விதம் பரந்த அளவில் விழிப்புணர்வு பெற்றிருக்கும் குட்டி முதலாளித்துவ வர்க்கமானது உற்பத்தித்துறையில் நேரடியாக ஈடுபடாமல் இருப்பதன் காரணமாகவும் சேவையில் ஈடுபடும் வர்க்கம் என்பதாலும் இந்த வர்க்கமானது பொருளாதார அடித்தளத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டுவர முடியாது என்பதை நன்குணர்ந்து கொள்ளவேண்டும். ஒரு புரட்சிகரப் போராட்டத்தில் குட்டி முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து தோற்றம் கொள்ளும் தனி நபர்கள் எத்தகைய முக்கிய பாத்திரத்தை வகித்த போதிலும் அவர்கள் ஈற்றில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில்லை என்பது உலக வரலாறு கற்றுத்தரும் பாடமாகும். அரசியல் அதிகாரமானது பொருளாதார சக்தியைத் தன்வசம் வைத்துக்கொள்ளும் முதன்மையான வர்க்கத்திடமேயே நிலைகொள்கிறது. இதன் அடிப்படையில் காலனித்துவ, நவகாலனித்துவ சமுதாயங்களில் இரண்டு சக்திகளே இந்த சூழ்நிலைக்கொண்டிருக்கின்றன. ஒன்று, ஏகாதிபத்தியவாதிகள். அடுத்தது, தேசியப் பாட்டாளி வர்க்கம்.

தேசிய விடுதலையால் தனது காத்தில் ஒப்படைக்கப்படும் அரசியல் அதிகாரத்தை பேணி பாதுகாக்க வேண்டுமாயின் குட்டி முதலாளி வர்க்கம் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். ஒரு முதலாளி வர்க்கமாக மாறவேண்டுமென்ற தனது இயல்பான போக்கினைக் கைவிட்டு விடவேண்டும். அல்லது தேசிய போலி-முதலாளி வர்க்கமாகவோ அன்றி அதிகாரத்துறை முதலாளி வர்க்கமாகவோ மாறுமேயானால், அது புரட்சியை மறுதலிப்பதாக அமையும். இந்நிலையில், இக்குட்டி முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகளுடன் அணிசேர்ந்து கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும். இது நவ-காலனித்துவ நிலைமையை நீடிக்கச் செய்வதோடு தேசிய விடுதலை இலட்சியங்களுக்கே துரோகமிழைப்பதாக முடியும். குட்டி முதலாளித்துவ வர்க்கமானது புரட்சி இலட்சியங்களுக்குத் துரோகமிழைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமாயின் அது செய்ய வேண்டியது இதுதான்; தனது புரட்சிகரப் பிரக்ஞையை ஆழமாக்குவது; முதலாளி வர்க்கமாக மாற வேண்டுமென்ற தனது அபிலாசைகளையும் தனது வர்க்க மனோபாவத்திற்கே உரிய தனது இயல்பான எழுச்சிகளையும் கைவிடுவது; பாட்டாளி வர்க்கத்துடன் தன்னை இனம் கண்டு கொள்வது; புரட்சியில் இயல்பான வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்காமல் இருப்பது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் தனது பங்கைப் பரிபூரணமாக நிறைவேற்ற வேண்டுமாயின் புரட்சிகரக் குட்டி முதலாளித்துவ வர்க்கமானது, வர்க்கம் என்ற வகையில் தன்னை அழித்துக் கொண்டு மக்களின் ஆழ்ந்த அபிலாசைகளுடன் இறுகப் பிணைந்த புரட்சிகரப் பாட்டாளி வர்க்கமாக புனர்ஜென்மம் பெற வேண்டும்.

புரட்சிக்குத் துரோகம் இழைப்பதா அல்லது வர்க்கமாகத் தன்னை அழித்துக்கொள்வதா என்பதுதான் பொதுவாக தேசிய விடுதலைப் போராட்டத்தில் குட்டி முதலாளிவர்க்கத்திற்கு எழும் இரண்டக நிலையாகும். இந்த இரண்டக நிலையிலிருந்து விடுபட்டு புரட்சிக்கு சாதகமான ஆக்கபூர்வமான தீர்வை இவ்வர்க்கம் பெற வேண்டுமாயின் பிடல் காஸ்ட்ரோ சரியாகக் குறிப்பிடுவதுபோல **புரட்சிகர மனசாட்சியை விரிவடையச் செய்தாக வேண்டும்.** இந்தத் தீர்வானது போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பேணுவதில் தலைமை பீடத்திலுள்ள ஆற்றலில் தங்கியிருக்கிறது. இவற்றை எல்லாம் நாம் கருத்தில் கொள்ளும்போது ஒரு தேசிய விடுதலைப் போராட்டமானது அடிப்படையில் ஒரு அரசியல் பிரச்சினையே ஆயினும், அதன் வளர்ச்சியை முன்னெடுக்கும் சூழ்நிலையில் சில தார்மீக அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைவதைக் காணலாம்.



## ஒரு கெரில்லாவின் பிரகடனம்

**ஏனெனில் எனது தேசம் எழில்மிக்கது!**
**வானில் உயர்த்திய ஒரு வாள்போல்**
**வலியதும் தனித்து ஓங்கியதுமாகிய ஒரு வாள்போல்**
**இன்றும் அது எழில்மிக்கதுதான்!**

**நான் எனது வாழ்க்கையைக்கொண்டு**
**எனது தேசத்திற்காக வழக்காடுகிறேன்!**
**எதிர்த்தாக்குதலில் இறங்கினேன்!**

**எமை வதைப்பவர்கள் கூறுவதை**
**ஏற்கத் துணியேன்!**

**உருக்கின் கண்ணீர்த் துளிகளால்**
**நாங்கள் பாதைகளை நிறைத்தோம்!**

**வானம் எங்களுடையது!**
**எங்களின் அன்றன்றைய சோற்றுக்கு**
**நாங்கள் விதைக்கவும் கொய்யவும் செய்தோம்!**

**விளைநிலங்களும் வயல்வெளிகளும் எங்களுடையவை!**
**கடலும் காடுகளும் பறவைகளும்**
**எங்களுடையவைதாம்!**

**மூலம்: யாவியர் எரோது**
**மலையாளம் வழி தமிழில்: இரணியன்**

## பாடசாலையில் அரச பயங்கரவாதம்

**அக்டோபர் 17-ம் திகதி.**

**நேரம் காலை 11-20.**

இளவாலை செ. ஹென்றி கல்லூரியில் வகுப்பு அமைதியாக நடந்து கொண்டிருக்கிறது.

அந்த அமைதியைத் துளைத்துக்கொண்டு பாடசாலைச் சுவர்களிலும், கரும்பலகைகளிலும் துப்பாக்கிச் சன்னங்கள் துளையிடுகின்றன. தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள் ஒலிக்கின்றன. வகுப்பறையில் அமர்ந்திருந்த மாணவர்களின் தலைக்கு மேலே சென்ற துப்பாக்கிச் சன்னமொன்று கரும்பலகையைத் துளைக்கின்றது. பன்னிரண்டு அங்குல ஆழத்திற்கு துப்பாக்கிக் குண்டு துளைத்துவிட்டு நின்றது. மாணவர்களோ, ஆசிரியர்களோ இந்த துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகாமல் தப்பியது ஆச்சரியமாகும். பிரதான பாதைக்கு அருகில் அமைந்திருந்த பாடசாலை மேல் மாடியில் வகுப்பு நடத்திக்கொண்டு இருந்த கன்னியாஸ்திரி ஒருவர் இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மயிரிழையில் உயிர் தப்பினார்.


இந்த பாடசாலை வளவுக்குள் கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் அரச பயங்கரவாதிகளால் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தைக் கேட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் திசை தெரியாது ஓடினர். இந்தக் குழப்ப நிலையில் மாணவர்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடியதில் கை, கால்களை முறித்துக் கொண்டனர்.

பாடசாலை கேட்டை உடைத்துக் கொண்டு இராணுவத்தினர். உள்நுழையும் சத்தத்தைக் கேள்வியுற்ற கல்லூரிப் பொறுப்பாளர் வகுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று அவர்களுக்கு அறிவிப்பதற்காக கேட்டை நோக்கி - விரைந்து சென்றார். துப்பாக்கி முனையில் அவரை நிறுத்திய இராணுவத்தினர் அவரை வகுப்பு வகுப்பாக அழைத்துச் சென்றனர். கவச வண்டியில் வந்து இறங்கிய இன்னொரு இராணுவக் குழுவினர் ஆசிரியர் தங்கியிருக்கும் அறையை நோக்கிப் பாய்ந்தனர். அங்கு நின்ற ஆசிரியர்களை நோக்கிக் கைகளை உயர்த்திக் கொண்டு எழுந்து பேசாமல் நிற்குமாறு கட்டளையிட்டனர். "இவர்கள் எல்லோரையும் சுடுவோமா?" என்று அதில் ஒருவன் கேட்டான். ஆசிரியர்களோ மூச்சுப் பேச்சில்லாமல் நின்றனர். சிலர் தங்களது கடைசி ஜெபத்தைச் சொல்ல ஆரம்பித்து விட்டனர். "இதில் யாருக்காவது சிங்களம் தெரியுமா?" என்று ஒருவன் கேட்டான். ஒரு ஆசிரியர் தனக்கு சிறிது தெரியும் என்றார். "யாராவது இங்கிருந்து தப்பி ஓடினார்களா?" என்று அவன் கேட்டான், "அடோய்! பொறுகியண்ட எப்பா" என்று ஆசிரியரை வெருட்டினான். மரண பீதி தழுவிய நிலையில் பகல் 2-30 மணி வரை முழுப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக இந்த சம்பவத்தின் போது யாரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகவில்லை.

தமிழ்ப் பிரதேசங்களில் பாடசாலைகளில் இத்தகைய இராணுவ அட்டூழியங்கள் இப்போது சகஜமாகியுள்ளன.

## அரச பயங்கரவாதத்தை எதிர்த்து தமிழ் மாணவர்கள் ஆர்த்தெழுகிறார்கள்







www.eelamview.com



# நினைவு அஞ்சலி

ரோசம்



சஞ்சீவி





நாயகத்தின் விடுதலைக்கான
புரட்சிகரப் பயணத்தில்
உயிரை மாய்த்துக்
கொண்ட தியாகிகளே,
உங்கள் உறுதியில்
உரம் பெற்று
உயரும் ஆயிரமாயிரம்
கரங்கள்
துவக்குகளுடன்.



அன்சார்

எட்வின்




குமரி நாடன்

ரவி எனப்படும்
த. வாமதேவன்

சீலன்







தமிழீழ விடுதலைக்காக களத்தில் உயிரிழந்த இந்தியாகிகளுக்கு எமது வீர வணக்கங்கள்.





தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன் லெப்டினன்ட் செ. சத்தியநாதன் (சங்கர், சுரேஷ்) வீரமரணமடைந்த ஈராண்டு நிறைவுக்கு விடுதலைப் புலிகள் அஞ்சலி செலுத்துவதைச் சித்திரிக்கும் சுவரொட்டி.


## வெளிவந்து விட்டது

# DIARY OF COMBAT

A historical and chronological
Sketch of the Armed Resistance
Campaign of the Liberation Tigers
of Tamil Eelam.




பிரதிகள் பெறுவதற்கு
A. இராஜாராம்
த. பெ. எண்: 928
அடையாறு
சென்னை-600020

## விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகார பூர்வமான மாத இதழ்.

சந்தா விபரம்
ஒரு வருட சந்தா ரூபா. 25.00
(தபால் செலவு உட்பட)

விடுதலைப் புலிகள் பத்திரிகைக்கு சந்தாப் பணம் அனுப்ப விரும்புவோரும் அன்பளிப்பு செய்ய விரும்புவோரும் A. இராஜாராம் என்ற பெயருக்கு காசோலை அல்லது மணி ஆர்டர் மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பும் அன்பர்கள் தமது பெயர், விலாசத்தைத் தெளிவாக எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விடுதலைப் புலிகள் பத்திரிகையுடன் தொடர்பு கொள்ளும் விலாசம் :

த. பெ. எண்: 928
அடையாறு
சென்னை 20


www.eelamview.com